www.tamilarangam.net

Raya

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE



போராட்டம் என்பது உயிர்ப்பறிப்பு என்று
அர்த்தப்பட்டுப் போனதில்
உயிர்த்திருத்தலே போராட்டமாகியுள்ளது...

TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR.35

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஒழுங்காகத் தேர்தல் நடத்திக் கொண்டிருக்கின்ற மூன்றாம் உலக ஜனநாயகத்தின் சிறந்த ஒரு முன்மாதிரியாக 1982ம் ஆண்டு வரை இலங்கை கருதப் பட்டு வந்தது என்பது என்னவோ உண்மை தான்.

இந்த ஜனநாயக நடைமுறையை மாற்றிப் பொதுசன வாக்கெடுப்பு மூலம் தனது ஆட்சிக் காலத்தை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடித்துக் கொண்டது யு.என்.பி அரசு.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்தரம் பெற்றதிலிருந்து உருவான ஒரு பாரளுமன்ற ஜனநாயகப் பாரம்பரியத்திற்கு விழுந்த மரண அடி இது. இந்த நாட்டின் சமூக அரசியல் வாழ்க்கையை வார்த்தெடுப்பதில் கணிசமான செல்வாக்குச் செலுத்திய ஒரு சோசலிச ஜனநாயக அரசியற் கலாச்சாரத்தின் குரல்வளையை இது நெரித்தது.

1977ம் ஆண் பாராளுமன்றத்தில் 2/ பெரும்பான்மைப் பலத்துட அதிகாரத்தினைக் கைப்பற்றி கொண்ட யு.என்.பி. பாரா மன்ற ஜனநாயகம் என்ற போ நிழலின் கீழ் எதேச்சதிகா அரசியல் அமைப்பை நோக் நடை போட்டது. மேலு 'சுதந்திரம்' அடைந் காலத்திலிருந்து தொடர்ச்சியாக பதவிக்கு வந்த அரசாங்கங்களு சிறுபான்மை இனங்களி உரிமைகளை நிராகரித் பெரும்பான்மை சிங்க இனத்திற்கு அதிகார பலத்தை பெற்றுக் கொடுத்தன.

தமிழர்களின் மீதான ஒடுக்குமுறை வேறொரு கட்டத்தை நோக்கி நகர்ந் திருந்தது. தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராக தமிழர்களின் மத்தியில் எழுந்த மிதவாதிகளின் கிளர்ச்சிக்கு அரசியல் ரீதியில் ஒரு அர்த்தமும் இல்லாது போன நிலையில் இது ஒரு அரசியல் வெற்றிடத்தினைத் தோற்றுவித்தது.

# துப்பாக்கிக் கலாசாரத்திலிருந்து மீள்வது எப்போது?

www.tamilarangam.net

1970களின் பிற்பகுதியில் இந்த அரசியல் வெற்றிடத்தில் ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்களின் பிரவேசம் நிகழ்ந்தது. இன்றைய அரசியல் நிலைமையின் முதல் சமிக்ஞையே இது.

சிங்களப் பெரும்பான்மை அரசிற்கு ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்கள் அரசியல் பரிபாஷையில் விடுத்த செய்தி பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் மத்தியில் தீவிர எதிரொலிகளைக் கிளப்பியது.

சிங்கள தேசத்தினதும் பௌத்தத்தினதும் பாது காவலனாகத் தன்னைப் பிரகடனப் படுத்திய அரசு ஆயுதமேந்திய தமிழர் கிளர்ச்சியை அழித் தொழிப்பதில் மூர்க்கமாக முனைந்தது. சகல இனவெறிப் பிற்போக்குச் சக்திகள் அனைத்தும் தமிழர்களுக்கு எதிரான அரசியல், தத்துவார்த்த சிந்தனை வெறியில் திளைத்தன. நவீனரக ஆயுத வசதிகளோடு வெற்றிகரமான ஒரு கெரில்லா யுத்தத்திற்கான பலம் மிக்க பின்தளத்தைத் தமிழகத்தில் கொண்டிருந்த ஆயுதந் தாங்கிய தமிழர் இயக்கத்தினை நிர்மூலமாக்கி அழித்தொழிப்பதே இப்போது தாரக மந்திர மாகியது. இந்த அரசியல் நெருக்கடி இலங்கையின் பிராந்திய எல்லையையும் மீறிச்செயற்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக எங்கள் மண்ணில் நடந்து கொண்டிருக்கும் இந்த யுத்தம் எமது தேசத்தின் அரசியல் வாழ்க்கையையே முற்றுமுழுதாக இராணுவமயப்படுத்தியது.

தமிழ் மக்களுக்கு எதிரான இந்த யுத்தத்தை மகோன்னதப்படுத்தலே தென்னிலங்கை அரசியல் கலாசாரத்தின் ஜீவநாதமாகியது.

## தயபால திரணகம

அரசின் ஆதிக்கத்தில் இயங்கிய தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள் ஆகியவற்றுடன் சேர்ந்து எதிர்க்கட்சியாக இயங்கிய சிங்கள மேலாதிக்கக் கட்சிகளும் இதற்குச் சமமாகத் துணை போயின. இதன் விளைவு சிங்களத் தேசியவாதம் தீவிர வெறித் தனத்தில் மூங்கி எழுந்தது.

கடந்த மூன்றாண்டு காலத்தில் இந்த அரசியல் நெருக்கடியின் அடிப்படைத் தன்மைகளில் கடுகளவேனும்

www.tamilarangam.net

மாற்றங்கள் ஏற்படவில்லை யாயினும் பல புதிய அம்சங்களை அது தனக்குள் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

அரசாங்கத்தின் ஆயுதப்படைகளுக்கும் ஜே.வி.பி. (ஜனதா விமுக்தி பெரமுன)அதன் இராணுவப் பிரிவான டி.ஜே.வி (தேசப்பிரேமி ஜனதா வியாபாரய) ஆகிய அமைப்புகளுக்கும் இடையிலான யுத்தமானது இரண்டு பக்கங்களிலுமிருந்து ஆயுதந் தாங்கிய குழுக்கள் திணித்த பயங்கரவாதம், வன்முறை, கொலைவெறி என்பனவற்றின் நேரடிப் பிரதிபலிப்புத்தான்.

இவை சாதாரண மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் அனைத்தையும் ஸ்தம்பிக்கச் செய்தன.கிளர்ச்சி என்புகனை நினைக்கக்கூடப் பார்க்க முடியவில்லை. விமர்சனம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

எக்காலப் பகுதியிலும் இல்லாதவாறு கிளர்ச்சியையும், விமர்சனத்தையும் முன்வைத்தோருக்கு மரணத் தீர்ப்பு மட்டுமே எதிர்முனையில் முன்னால் நின்றது.

இந்த அராஜக யுத்தங்கள் நாகரிக சமுதாயத்தின் நல் விழுமியங்கள் அனைத்தையும் தடயமே இல்லாமல் குழி தோண்டிப் புதைத்தன.

## நெருக்கடிக்குள் அரசு

இலங்கையின் அரசியல் நெருக்கடி இன்று அரசின் நெருக்கடி ஆகிவிட்டிருக்கின்ற இந் நிலையில் தென்னாசியப் பிராந்திய நாடுகளும்,பிற மூன்றாம் உலகநாடுகளும் கற்றுக்கொள்ளவேண்டிய பல முக்கிய பாடங்களை இலங்கை இன்று தன்னகத்தே கொண்டிருக்கிறது.

இனரீதியிலான வேறுபாடுகள் கொண்ட பல் இனச் சமூகங்களில் ஒற்றையாட்சி அமைப்பொன்றினைப் பல வந்தமாகத் திணிப்பதால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகள் எத்தகையதாய் அமையும் என்பதைப் பற்றிய பாடமே அது.

இத்தகைய அரசுகளில் ஜே.வி.பி/டி.ஜே.வி போன்ற அமைப்புகள் செழித்து வளர்வதற்கான சாத்தியங்கள் நிறையவேயுள்ளன.இவை சமூக வளர்ச்சியின் மீதும்,புரட்சிகர சமூக மாற்றத்தின் மீதும் மிக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தவல்லன.

முதலாளித்துவத்திற்கு முன்னைய காலகட்ட குணாம்சங்கள் கொண்ட சமூக உருவாக்கத்தில் நிலபிரபுத்துவ கருத்தாக்கங்கள் நிலவுவதே இத்தகைய அரசியல் நிலைமைகள் வேரூன்றுவதற்கான தத்துவார்த்த தளமாக அமைகின்றன. இத்தகைய நிலைமைகளில் எந்த இனவாரி சமூகமும் 'கலாசார அடிப்படைவாதத்தினை' நோக்கிய - அது எத்தகைய மோசமான வன்முறை வடிவங்களைக் கொண்டிருந்தாலும் கூட - ஒரு புத்தெழுச்சியை நாடி நிற்பது இயல்பாகும். இத்தகைய தூய - தனித்துவ - பழமை தழுவிய கலாசாரவாதத்தினை நோக்கிய புத்தெழுச்சி பிற இனவாரி சமூகங்களையும் அத்தகைய வாதத்தினை மேற்கொள்ளத் தூண்டும்.

இலங்கையின் மூன்றாவது பெரிய இனவாரி சமூகமான முஸ்லீம் சமூகத்தினர் சிங்கள, தமிழ் சமூகங்களால் தமது தனித்துவங்களும், உரிமைகளும் புறக்கணிக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் காரணமாக, அரசியல் ரீதியாக தாம் நிலைபெற வேண்டுமெனில் தீவிர இஸ்லாமிய அடிப்படைவாதத்தினை விட்டால் வேறு வழி இல்லையென்று அதிலேயே தஞ்சம் புகுந்துள்ளனர்.

இலங்கையின் இன்றைய பின்னணியில் இதன் அர்த்தம் யாதெனில் ஒவ்வொரு இனவாரி

www.tamilarangam.net

சமூகமும் ஆயுதபாணியாகித் தயார் நிலையில் இருக்கிறது என்பதுதான்.

இலங்கை போன்ற பல் இனச் சமூகங்களைக் கொண்ட ஒரு தேசத்தில் ஒவ்வொரு சமூகமுமே ஆயுதப் போராட்டத்தின் அதியுச்ச வன்முறை வடிவங்களின் பலத்துடன் தமது அரசியற் கோரிக்கைகளை முன் வைக்க ஆரம்பிக்கிறது.

இவ்வாறு அதி தீவிர தேசியவாதமும்,பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தில் ஜே.வி.பி., தமிழ்ச் சமூகத்திலிருந்து எல்.ரி.ரி.ஈ. போன்ற ஆயுதக் குழுக்களுமே இன்றைய இலங்கை நெருக்கடியின் மத்தியஸ்தர்களாகத் தோற்றம் தருகின்றன.

பெரும்பான்மைச் சமூகத்தின் சிங்கள மேலாதிக்க வாதத்திற்கு எப்போதுமே துணைபோகும் பூர்சுவா அரசும் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்குள்ள ஒரே ஒரு வழி இராணுவத் தீர்வுதான் என்று கருதுகிறது. இவ்வாறு கருதிக்கொண்டு தீவிர சிங்களவாத ஜே.வி.பி. போன்ற குழுக்களையும் தாக்கத் தொடங்கும்போது நிலைமை மேலும் சிக்கலாகி விடுகிறது. எளிமையான ஆய்வுகளும், தீர்வுகளும் இந் நிலையில் சாத்தியமற்றுப் போய்விடுகின்றன.

இராணுவமயமாக்கலிலிருந்து மீள்வோம் என்ற கோஷத்தின் அரசியல், தார்மீக நியாயத்தை விளங்கிக்கொள்வதற்கு இந்த நிலைமையின் சிக்கலான குணாம்சங்களை விளங்கிக் கொள்வது முதலில் அவசிய மானதாகும்.

இன்றைய இந்த நெருக் கடியின் பயங்கர வன்முறை வடிவிலான குமுறல் 1983இற்கு நம்மை இட்டுச் செல்கிறது.இந்த ஆண்டில்தான் பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தின் தீவிர இனவாதச் சக்திகள் தமிழருக்கு எதிரான குரூர வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டிருந்தன.இன்றைய இந்த நெருக்கடிக்குக் காரணமான சக்திகள் தமது உண்மையான சொரூபத்தை அப்பட்டமாகக் காட்டி அழிவு நடவடிக்கைகளில் இறங்கின.

1983இன் இனக் கலவரங்களுக்குப் பிறகு ஆயுதந் தாங்கிய தமிழர் இயக்கங்கள் ஆயிரக்கணக்கில் குவிந்த இளைஞர்களுடன் எண்ணிக் கையில் பல்கிப் பெருகின. இதே

www.tamilarangam.net

நேரத்தில் யு.என்.பி. அரசு தமிழருக்கெதிரான சகல அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்துவிட்டது. இவ்வாறு 'தமிழர் விரோத தத்துவார்த்த அரசியல் வெறித்திரைக்குள் - தடுப்பிற்குள்'1 தனது ஆதிபத்திய நிலையைத் தக்க வைத்துக் கொண்டது.

இத்தகைய காட்டுமிராண்டித்தனமான -குரூரமான- ஒடுக்குமுறைபோல ஒன்றினை நாம் சரித்திரத்தில் இதற்கு முன்னர் எங்கும் கண்டதில்லை. தமிழ்ச் சமூகத்தின் சகல பிரிவினர் மத்தியிலும் இது பயங்கர அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த தமிழர் விரோத அரசியல் அணி சிறீலங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, ஜே.வி.பி. போன்ற கட்சிகளைக் கொண்டிருந்தது. இந்தக் கட்சிகளுக்கிடையே தந்திரோபாய ரீதியில் சிற்சில வேறுபாடுகள் காணப்பட்டன என்பதைத் தவிர இவற்றிற்கிடையே பெரிய வித்தியாசம் ஏதுமில்லை.

---

1- கட்டுரையாளர் இதை 'anti-Tamil ideological and political block' என்று குறிப்பிடுகிறார்.

(இலங்கையின் கசாப்புக் கடைக்காரன் பிரேமா)




(இங்கிலாந்தில் வெளியிடப்பட்ட சுவரொட்டி)


தமிழ் மக்களுக்கு எதிரான துவம்ச யுத்தம் ஒன்றை யு.என்.பி. அரசு நடத்திக் கொண்டிருந்த அதேவேளையில் இந்த தமிழ் விரோத அணியினைச் சார்ந்தவர்களோ தமிழ் தீவிரவாத இயக்கத்தை வெற்றிகரமாக அழித்தொழிக்க அரசு திராணியற்றுப் போயிருக்கிறதென்று கண்டித்துக் கொண்டிருந்தனர்.

இந்தத் தமிழ் விரோத அணியின் தலைமையை யார் சுவீகரிப்பது என்பதற்கான போட்டா போட்டிகள் ஆரம்பமாகிவிட்டன என்பது தெளிவாக இருந்தது.

(தொடர்ச்சி 32ஆம் பக்கம்)

www.tamilarangam.net

# வித்தியார்த்தியின்




தற்செயலாக எனது றூம்மேட் வித்தியார்த்தியின் டயறியைப் பார்க்க நேரிட்டது. மற்றவர்களின் டயறியைப் படிப்பது அநாகரிகம் என்று எழுதியிருந்த முதல் பக்கத்தைத் தட்டிவிட்டு உள்ளே அநாகரிகமாகப் படிக்க ஆரம்பித்தால்.... ஆசாமி எழுதிக் குவித்திருந்ததுகளைப் பார்க்க ஆச்சரியமாயிருந்தது. அவற்றைப் படித்த பின்பு மற்றவர்களுக்கும் இதைத் தெரியப்படுத்த வேண்டுமென்று எனக்கு தலை வெடிக்க ஆரம்பித்துவிட்டது. முதலில் முரண்டு பிடித்தாலும், அப்படியே எல்லாவற்றையும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தாமல் முக்கியமானவற்றை மட்டும் நானே தொகுக்கின்றேன் என்று பல தடவைகள் சண்டை பிடித்தபின்தான் அரைமனதுடன் அவன் சம்மதித்தான்.

இரா. செல்வத்துரை

டொக்டரிடம் போயிருந்தபோது, காத்திருக்கும் அறையில் இருந்த நேரத்தில் அங்கிருந்த டொச் சஞ்சிகைகளை புரட்டிப் பார்த்தபோது வித்தியார்த்திக்குக் கோபம்தான் வந்தது.

சில வருடங்களுக்கு முன்பு ஈராக் எல்லையிலிருந்த குர்திஷ் அகதிகள் ஈராக்கியபடைகளால் விசவாயு மூலம் கொல்லப்பட்டமை படங்களுடன் விபரமாக எழுதப்பட்டிருந்தன. கைக்குழந்தைகள், முதியவர்கள், இளைஞர்கள், அங்கவீனர்கள்.. என்று ஏராளமானவர்கள் செத்துக்கிடந்ததை கலர்ப்படங்கள் பயங்கரமாகச் சித்தரித்திருந்தன.

இத்தனை கலர்ப்படங்களையும், விபரங்களையும் கைவசம் வைத்துக்கொண்டு தானே இந்த மேற்குலப் பத்திரிகைகள் குர்திஷ் மக்கள் ஈனத்தனமாக கொல்லப்பட்டபோது எதுவுமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடக்காத மாதிரி மௌனமாயிருந்திருக்கின்றன.

யுத்தவிதிகளுக்குப் புறம்பாக தடைசெய்யப்பட்டுள்ளவிச வாயுவினல் நிராயுதபாணியான அப்பாவி மக்களை, ஒரு இனத்தை அழித்தபோது ஈராக்கை கண்டிக்காமல், நடந்தவைகளை மூடி மறைத்து, ஈராக்கிற்குத் தொடர்ந்தும் ஆயுத, நிதி உதவிகள் செய்துகொண்டிருந்த இந்த மேற்குலக நாடுகளுக்கும், இவற்றின் ஊதுகுழல்களான பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கும் திடீரென்று எப்படி இந்த ஞானோதயம் வந்தது என்று வித்தியார்த்தி சிந்தித்தபோதுதான் இன்றைய வளைகுடா நெருக்கடி பளிச்சிட்டது.

முன்பு தாங்கள் காப்பாற்றிக்கொண்டிருந்த ஈராக்கிய பயங்கரவாதம் இப்போது தங்களுக்கெதிராகத் திரும்பியதும்தான் முன்பு தங்கள் உதவியுடனும், உதவியில்லாமலும் நடந்த ஈராக்கின் அக்கிரமங்களைக் கண்டிக்க வேண்டியதும், வெளி உலகுக்கு அவற்றை காட்ட வேண்டியதுமான தேவை இந்த மேற்குலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளதென்றல், இந்த நாடுகளுக்குள்ளே முரண்பாடுகள் முற்றி, இவைகளின் சுயரூபம் தெரியவரும் காலம் எப்போது என்பது வித்தியார்த்தியின் கேள்வி.

* * * *

இலக்கியச் சந்திப்புக்குப் போகவேண்டும் என்ற வித்தியார்த்தியின் ஆசை செப்டெம்பர்மாதம் நடந்த 9ஆவது சந்திப்பில் நிறைவேறியது.

என். எஸ். எம். இராமையாவை நினைவுகூர்ந்து, அவரின் குடும்பத்தினருக்கு நிதி சேர்க்கப்பட்டபோது வித்தியார்த்திக்கு உண்மையில் வெட்கமாய்தானிருந்தது. வடக்கு, கிழக்குக்குள்ளேயே பார்வை குறுக்கப்பட்டதாலா அல்லது மலையகம் சம்பந்தப்பட்டவை அமுக்கப்பட்டு வருவதாலா அந்த ஏழை எழுத்தாளரைத் தெரியாமற் போயிற்று என்பது வித்தியார்த்திக்குச் சரியாகப் புரியவில்லை.

வி. நடராஜன் என்பவர் மேற்கு ஜேர்மெனியில் வெளிவரும் சஞ்சிகைகளை அக்குவேறு, ஆணிவேருக்கியமை வித்தியார்த்திக்கு நன்கு பிடித்திருந்தது. விமர்சனம் முழுமை பெறுவிட்டாலும், செய்த விமர்சனத்திலிருந்த துணிவும், வெளிப்படையும் கூட பிடித்ததிற்கான காரணங்களாகும்.

புலி இயக்கத்திற்கு ஆதரவான சஞ்சிகைகள், மாகாண சபையில் பங்கெடுத்த இயக்கங்களுக்கு ஆதரவான சஞ்சிகைகள், இந்த இரண்டு பகுதியையும் சாராத சஞ்சிகைகள் என்று 3 தரத்தில் சஞ்சிகைகள் அனைத்தையும் அடக்கியிருந்தமை சஞ்சிகைகளை இனங்காண்பதில் வித்தியார்த்திக்கு உதவியது.

சமையல், உபசரிப்பு, மண்டப ஒழுங்குகள் என்ற ஆலன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாசகர் வட்டத்தின் பெரிய உழைப்பு மறைந்தேயிருந்தது வித்தியார்த்திக்குக் கவலை.

சந்திப்பு முடிவில் "எந்த இயக்கம் செய்தாலும் பேசாம இருங்கோ. புளொட் செய்தால் மட்டும் கொட்டை எழுத்தில எழுதிப்போடுவீங்க" என்றபடி புளொட்காரர் ஒருவர் ஆவேசமாக சண்டித்தன பிளானில் வந்தது வித்தியார்த்திக்கு துப்பரவாகப் பிடிக்கவில்லை.

சந்திப்புக்குப் போய்வந்ததிலிருந்து வித்தியார்த்தியைச் சில கேள்விகள் குடைந்துகொண்டேயிருக்கின்றன. இலங்கைப் பிரச்சினைக்கு சஞ்சிகைகள் வைக்கும் தீர்வென்ன என்று பலர் கேட்டதற்கு ஏன் எந்த சஞ்சிகை ஆசிரியருமே பதிலளிக்கவில்லை? தீர்வைத் தெரிந்து வைத்துக்கொண்டு அதையேன் மற்றவர்களுக்குச் சொல்லுவான் என இவர்கள் சொல்லாமலிருக்கிறார்களா? அல்லது உண்மையில் இவர்களிடம் தீர்வு இல்லையா? அல்லது வெளிநாடுகளிலிருந்துகொண்டு தீர்வு சொல்லமுடியாதா?

*     *     *     *

பாஸ்போட் றினியூ பண்ண சிலோன் எம்பஸிக்குப் போயிருந்த கனகர் தனக்குச் சிங்களம் தெரியும் என்று காட்ட எடுத்துக் கொண்டுவந்த சிங்களப் பத்திரிகைகளை வாசித்துக் காட்டியபோது ஒரு செய்தி வித்தியார்த்தியை மிகவும் பாதித்தது.

பூமி புத்ரா என்று புதிய கட்சியொன்று தோன்றியிருக்கிறதாம். உள்ள சிங்களப் பணக்காரர், பெரிய உத்தியோகத்தர்-தானும் இதில அங்கத்தவர். அவர்களின் கொள்கை பௌத்தசிங்களவருக்கு மட்டுமே இலங்கை சொந்தமாம். பௌத்தரல்லாத சிங்களவரும், கள்ளத்தோணிகளான தமிழர்களும், மற்றவர்களும் இலங்கையை விட்டு ஓடிப்போய் விடவேண்டுமாம். வெளியிட்ட பத்திரிகை திவயின.

இதைக் கேட்டபோது வித்தியார்த்திக்கு நாஸிகளின் "அவுஸ்லாண்டர் றவுஸ்"* அதைவிடப் பரவாயில்லை என்றுதான் தோன்றியது. அன்றிலிருந்து இன்றுவரை இலங்கை அரசு பிடிக்க முயற்சிக்கும் பிள்ளையார் குரங்காகி மரத்து உச்சியில் ஏறிநின்று விளையாட்டுக் காட்டத் தொடங்கிவிட்டது.

நாடு போகிற போக்கில் "கொலை செய்பவர்களுக்கு மட்டுமே இலங்கை சொந்தம் மற்றவர்கள் ஓடிப்போய்விடவேண்டும் அல்லது செத்துப் போய் விடவேண்டும்" என்ற கொள்கைகளுடன் புதிய கட்சிகள் தோன்றக்கூடுமோ என்று வித்தியார்த்திக்குக் கவலையாயிருக்கிறது.

---

* அவுஸ்லாண்டர் றவுஸ் = வெளிநாட்டவரே வெளியேறு!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்கிலிருந்து:

# தேசத்தின் குறிப்புகள்

பிரஜைகள்

யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டை கைப்பற்றப்பட்டதாக அறிவிப்பதற்கு ஒருசில மணி நேரங்களுக்கு முதல், தாம் அங்கிருந்து வெளியேறிவிட்டதாகவும் வடக்கிலுள்ள 8 இலட்சம் தமிழ் மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு யாழ்போதனா வைத்தியசாலையை திறப்பதற்கு வழி செய்யும் விதத்திலேயே தமது இந்த வெளியேறுகை நடந்ததாகவும், யாழ் கோட்டையை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்கும்படி கேட்கப்பட்டுள்ளதாகவும் அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புக்கு முதல் நாள்வரை இலங்கை அரசின் தகவல் சாதனங்கள் அனைத்தும் கோட்டை தம்வசம் இருப்பதாகவும், தமது படைகள் ஆஸ்பத்திரி வீதி தாண்டி ஸ்டான்லி வீதி வரை முன்னேறிவிட்டதாகவும் அறிவித்துக்கொண்டிருந்தன.

மண்டைதீவில் புதிதாகத் திறக்கப்பட்ட முகாமிலிருந்து தமது படைகள் மேலும் மேலும் முன்னேறி வருவதாகவும், ஆயினும் ஒருசில தாக்குதல்கள் கோட்டையின் சுற்றுப்புறத்தில் நடப்பதாகவும், புலிகள் விதைத்திருக்கும் நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதில் இராணுவம் ஈடுபட்டிருப்பதாகவும் அறிவித்துக்கொண்டிருந்தது இலங்கை அரசு.

முன்னரே கோட்டைக்குள் தரையிறங்கிய கெலிகள் மூலமாக அங்கிருந்த இராணுவத்தினரை மீட்டுவிட்டதாகவும், அவர்களை வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாகவும் பாதுகாப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மைச்சர் பத்திரிகையாளரிடம் அறிவித்திருந்தார்.

ஆயினும் அவர்கள் எவ்வாறு வெளியே வந்தனர்? எந்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்? என்பதைப் பற்றிய விபரமான கேள்விகளுக்குப் பதிலளிக்கவில்லை.

ஆயினும் இரண்டொரு நாளில் அவர்கள் 'எப்படியோ' கொழும்பு கொண்டுவரப்பட்டனர். கொழும்பு பூராவும் ஆரவாரமாக வெடி கொழுத்திக்கொண்டாடப்பட்டது இந்த வெற்றி.

இருப்பினும், பொதுவாக இது உண்மையாக இருக்க நியாயமில்லை என்ற சந்தேகம் எனக்கு இருக்கவே செய்தது. ஏனென்றால் புலிகளின் கோட்டையைச் சுற்றியிருந்த சென்றிகள் தாக்கபட்டதாக அறிவிக்காமலே அதனுள் தாம் போய்வந்ததாக அரசு கூறியிருப்பதை எப்படி நம்ப முடியும் என்பது தெரியவில்லை. அரசாங்கம் வழமைபோல — பொய் சொல்லுகிறது என்ற எண்ணமே என்னிடம் இருந்தது.

ஆனால் இராணுவம் கொழும்பு கொண்டுவரப்பட்ட செய்தி பத்திரிகைகளில் பெரிதாக அறிவிக்கப்பட்ட பின்னர் அரசு திடீரென தாம் கோட்டையை கைவிட்டு வெளியேறிவிட்டதாக அறிவித்தது எனக்கு வியப்பை ஏற்படுத்தியது.

ஏற்கெனவே கோட்டை இராணுவ ரீதியாக எந்த சிறப்பு முக்கியத்துவமும் வாய்ந்த ஒன்றல்ல, இது ஒரு கௌரவப்—போரே எனத் தெரிவித்துவந்த போதும், ஒரு வாரத்திற்கு முன்புதான் புதிதாக 800 படையினரை அங்கு திரும்பவும் சேர்த்திருப்பதாக அது அறிவித்தது.

உண்மையில் அங்கிருந்துவெளியேறுவது அரசின் நோக்கமாக இருந்திருந்தால் ஏற்கெனவே அறிவித்தபடி 800 பேரை அங்கு இறக்கியிருக்க வேண்டிய தேவை இல்லை. எனவே இந்த வெளியேறல் முடிவு திடீரென எடுக்கப்பட்டிருக்கவேண்டும் அல்லது புலிகளிடம் அடிவாங்கிக் — கொண்டு பின்வாங்கியிருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

வெளியேறும் முடிவு திடீரென எடுக்கப்பட்டது என்பதை விட அவர்கள் அடித்து விரட்டப்பட்டார்கள் என்பதே எனக்கு நம்ப விருப்பமாகவும், சந்தோசமளிப்பதாகவும் இருந்தது.

ஆனால் இது பற்றிய எமது நண்பரின் கருத்துகளோ வேறு விதமாக இருந்தன.

கோட்டையைவிட்டு இராணுவம் வெளியேற்றப்பட்ட சந்தோசத்தை அவரிடம் நான் தெரிவிக்கையில் இது சந்தோசப்படுகிற விசயமா, துக்கப்படுகிற விசயமா என்பதைத் தீர்மானிக்கமுடியாத ஒரு நிலையையே தோற்றுவித்திருக்கிறது என்றார் அவர்.

வழமைபோல ஒரு சண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டைக்குத் தயாராகிக் கொண்டு நண்பர் இப்படிப் பேசுகிறார் என்றே எனக்குத் தோன்றியது . நான் "ஏன்?" என்று கேட்டு வைத்தேன்.

"கோட்டையை விட்டுப் புலிகள் இராணுவத்தை விரட்டியது சந்தோசம்தான். அதில் சந்தேகமில்லை. அரசு கயிறுதிரிப்பது போல அதற்கு ஒன்றும் திடீரென தமிழ்மக்கள் மீது கரிசனை வந்துவிடவில்லை. அப்படி அக்கறை உள்ள அரசாக இருந்திருந்தால் அதை முதலில், 2 மாதங்களுக்கு முன், சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் கேட்ட போதே செய்திருக்கலாம். இது ஒருவகை யுத்தரீதியான தோல்விதான். அதை ஈடுசெய்ய அரசு இப்படி ஒரு நியாயம் காட்ட முயல்கிறது.

தவிரவும் உண்மையில் அரசு வெளியேறிவிடுவதென்றால் புலிகளை அந்தப் பிராந்தியத்திலிருந்து வெளியேற்றிவிட்டு செஞ்சிலுவைச் சங்கத்தை வரவேற்றுக் கோட்டையை அதனிடம் பாரம் கொடுத்துவிட்டு வெளியேறியிருக்கவேண்டும். ஆனால் அதை அரசு செய்யவில்லை. வெளியே வந்து நின்றுகொண்டு செஞ்சிலுவைச்சங்கத்தை அங்கே போகும்படிகேட்கிறது. உண்மையில் நடக்கப் போவது என்ன தெரியுமா?"

"என்ன?"

"செஞ்சிலுவைச் சங்கத்திற்குப் பதில் புலிகளே அதனுள் முதலில் போனார்கள். அரசு செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோட்டையைப் புலிகள் கையளிக்கவேண்டும் என எதிர்பார்க்கிறது . ஆனால் இப்போது அதைத் தீர்மானிப்பது செஞ்சிலுவைச் சங்கமோ, அரசோ அல்ல. அது புலிகள்தான்"

"ஏன்? செஞ்சிலுவைச் சங்கத்திடம் புலிகள் கோட்டையை கொடுக்க மாட்டார்கள் என நினைக்கிறாயா?" என்று கேட்டேன் நான்.

"இது உண்மையில் புலிகள் சண்டையிட்டுப் பிடித்த கோட்டை. அதைக் கொடுப்பதா இல்லையா என்பதை புலிகள் தான் தீர்மானிக்கவேண்டும். அரசுக்கு உண்மையில் யாழ் ஆஸ்பத்திரியை இயங்கவைப்பது நோக்கமாகவிருக்கும் என்றால் புலிகள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோட்டையை ஒப்படைக்காவிட்டாலும், அந்தப் பிராந்தியத்தை முன்னரே அறிவித்தபடி யுத்தமற்ற பிரதேசமாகப் பாவிக்க வேண்டும் . ஏனென்றால் செஞ்சிலுவைச் சங்கம் இயங்குவதற்கு கோட்டை ஒன்றும் முக்கியமானது அல்ல. ஆஸ்பத்திரி இயங்கவேண்டுமானால் அப்பிரதேசத்தில் சண்டை நடக்காமல் இருந்தாலே போதும். அதைக் கடைப்பிடிப்பது இலங்கையரசின் கையில் இருக்கிறது. ..."

"ஓம். இலங்கை அரசு தாம் கோட்டையைத் தாக்குவோம், புலிகள் வெளியேறு விட்

www.tamilarangam.net

டால் என்று அறிவித்திருக்கிறது உண்மைதான்"

"அதுதான், பாத்தியா? அவர்களுக்கு உண்மையில் மக்கள் மீது கரிசனை இல்லை. யுத்தத்தில் தோற்றிருக்கிறார்கள். அதுதான் இதில் சந்தோசப்படுவதா? கவலைப்படுவதா? என்று சொல்லமுடியவில்லை என்று சொன்னேன். உண்மையில் இலங்கை அரசு அறிவித்தபடி நேர்மையாக ஆஸ்பத்திரி பிராந்தியத்தை யுத்தமற்ற பிராந்தியமாகக் கடைப்பிடிக்குமானால், புலிகளுக்கு மிக சிறந்த பாதுகாப்புப் பிரதேசமாக அது மாறிவிடும். அப்படி மாறினால் அதைத் திரும்பவும் யுத்த பிரதேசமாக மாற்ற அரசு தயங்கப் போவதில்லை. ஆக மொத்தத்தில் நிலைமையில் எந்தப் பெருமளவு மாற்றமும் ஏற்படப் போவதில்லை.."

"புலிகள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோட்டையை கொடுத்துவிட்டு வெளியேறினால்..?"

## தமிழில் HISTORIOGRAPHY

பால் வெளித் தொகுதி
இலட்சம் கோடி சூரியர்கள்

எமது சூரியனிற்குச் சொந்தமான
இந்தப் பூமிக்கிரகம்

யுகங்களாகக் கணித்ததில்
4,32,000 வருடங்கள் உடைத்தாய
இக் கலியுகத்தில்

இலங்கை
மூன்றும் உலக நாடுகளிலொன்று.

யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து
சோழர் காலத்தை
மீட்க முயன்றதில்

மன்னர்கள் பிழைக்க
மனிதர்கள்
இறந்து போயினர்.

—சுகன்

www.tamilarangam.net

"அப்படி வெளியேறினாலும் கோட்டையைச் சுற்றியுள்ள சென்றிகளையும், கோட்டைக்குள் நுழைவோர் மீதான பரிசோதனைகளை நடத்துவதையும் அவர்கள் நிறுத்தமாட்டார்கள். நிறுத்தவும் முடியாது. ஆகவே திரும்பவும்...."

"சரி நிப்பாட்டு. ஆஸ்பத்திரி விசயம் சரிவராது எண்டு சொல்லுறாய். ஆனால் கோட்டையைவிட்டு இராணுவம் வெளியேறினது ஒருவகையில வெற்றிதானே?"

"யாருக்கு..?"

"யாருக்கா? ஏன் அப்பிடி கேக்கிறாய்? புலிகளுக்கு, ஏன் தமிழ்மக்களுக்குத்தான். நீதானே புலிகளின் யுத்தமும், தமிழ் மக்களின் நலன்களும் பிணைக்கப்பட்டுள்ளது என்று சொன்னனி...!"

"ஒருவகையில உந்தக் கதை சரிதான். புலிகளுக்கு வெற்றி என்பது சரி. ஆனால் தமிழ் மக்களுக்கு எவ்வளவுக்கு இந்த வெற்றி உதவப் போகிறது? உண்மையில் புலிகள் தோற்கிற ஒவ்வொரு கணமும் கவலைப்படுகிற ஒவ்வொரு மனிதனும், புலிகள் வெல்கிற ஒவ்வொரு கணமும் அச்சப்படவும் செய்கிறான் என்பதுதான் எமது தேசத்தின் நிலைமையிலுள்ள ஒரு நூதனமான அம்சம்!"

"அதென்ன அப்பிடி அச்சம்?"

"நான் நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒருவரை சந்தித்தேன். அவரிடம் இதைப் பற்றி சும்மா கேட்டேன். உனக்குத் தெரியுமா அவர் என்ன சொன்னார் என்று...?"

"என்ன?"

"இனிப் புலியள் ரண்டு பவுண் இல்லை, அஞ்சு பவுண் கேப்பாங்கள். இப்பவே கொழும்புக்குப் போனவைகூட துரோகிகள் எண்டும், காணி மற்ற மற்ற சொத்துகளையெல்லாம் எழுதித் தந்திட்டுப் போகச் சொல்லியும் கேக்கிறவங்கள் இனி என்ன செய்வாங்கள்? எண்டு யாருக்குத் தெரியும்..?"

நான் ஒன்றும் பேசவில்லை. நண்பரின் பேச்சில் இருந்த நியாயம் எனக்குத் தெரிந்தது. கொஞ்ச நாட்களுக்கு முன்னர் எனக்கு ஒரு வெளி நாட்டு நண்பன் ஈராக் சனாதிபதி சதாம்குசேனைப் பற்றி சொன்ன விசயம் ஞாபகத்திற்கு வந்தது.

'சதாம் குசேன் ஒருபடு மோசமான பாஸிஸ்ட். தனது சொந்த மக்களையே இரசாயன ஆயுதங்களால் படுகொலை செய்தவன். கிட்லர் பாணியில் குர்திஷ் இன மக்களைக் கொன்று குவித்தவன். கொம்யூனிஸ்ட்டுகளை — அரபுநாடுகளிலேயே பலமாக இருந்த கொம்யூனிஸ்ட்டுகளை — முற்றாகப் படுகொலை செய்தவன். அவன் தண்டிக்கப்பட வேண்டியவன்தான்.

ஆனால் அவனை தண்டிக்கும்

www.tamilarangam.net

உரிமை அமெரிக்காவுக்குக் கிடையாது. அமெரிக்காவுக்கு ஈராக்கின் குவைத் மீதான ஆக்கிரமிப்புப் பெரிதாகத் தெரிகிறது. ஆனல் தான் பனமாவைப் பிடித்தது பெரிதாகத் தெரியவில்லை. இந்தப் பிராந்தியப் பிரச்சினையில் அமெரிக்கா முந்திகொண்டு பாய்வது குவைத்துக்-காகவோ அல்லது படுமோசமான எதிர்ப்புரட்சிகர (நண்பன் பாவித்த சொல்லு REACTIONARY) நாடான சவூதிக்காகவோ அல்ல. தன்ரை சொந்த நலனுக்காக...

ஆக, குவைத் மற்றும் ஈராக் மக்களுக்கு ஏன் அரபுமக்களுக்கே இப்ப உள்ள பிரச்சினை யார் வெல்லப் போகிறுர்கள் என்பதல்ல, யார் வென்ருல் எமக்கு பிரச்சினை குறைவு என்பதுதான்! உண்மையில் அமெரிக்காவை அடித்து விரட்டவும் வேணும். குசேனின் பாசிசத்தை ஒழிக்கவும் வேணும். அவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிருர்கள்..'

நண்பரிடம் இந்தக் கதையைச் சொன்னேன். அவர் சிரித்துக்கொண்டே சொன்னுர்:

"ஒருவகையில் இரண்டுக்கும் ஒற்றுமை இருக்கிறது உண்மைதான். ஆனல் இரண்டிலேயும் வேறுபாடும் இருக்கிறது. குசேன் ஆக்கிரமிப்பாளன். புலிகள் இன்னமும் தமது நாட்டையே ஸ்தாபித்துக் கொள்ளாதவர்கள்.. "

சொன்ன நண்பர் நீண்ட நேரமௌனத்தின்பின் சொன்னுர் "ஒரு ஒற்றுமையைப் பார்த்தாயா? 300 ஆண்டு பழமை வாய்ந்த இந்த ஐங்கோண டச்சுக் கோட்டை போர்த்துக்கீசர், ஆங்கிலேயர், சிங்களவர், இந்தியர்... என்று எப்போதும் மக்களின் ஒடுக்குமுறையாளர்களது வாசஸ்தலமாகத்தான் இருந்து வந்திருக்கிறது.."

"இப்போது அந்தக்கோட்டையில் புலிக்கொடி பறக்கிறது. புலிகளின் தலைவர்களுள் ஒருவரான பானு அதை ஏற்றிவைத்துள்ளார்" என்றேன் நான்.

"இது எங்கைபோய் முடியப்போகிறது என்று நினைக்கிருய்..?" என்று கேட்டார் நண்பர்.

"எனக்குத் தெரியவில்லை" என்றேன் நான்.

"குடாநாட்டில் தற்போது புலிகளின் ஆதிக்கம் இன்னும் ஒரு பங்கு அதிகரித்துள்ளது. கோட்டை போனபின் இலங்கை இராணுவத்திற்கு உள்ள ஒரேயொரு பெரிய இடம் பலாலி மட்டுமே. பலாலியிலிருந்து வெளிப்படத்தான் அது முயற்சிக்கப் போகிறது. ஏற்கெனவே இதற்கு வசதியாக டாங்கிகளையும் இலங்கை அரசு வாங்கிவிட்டது. அவை இன்னும் ஒரு மாதத்திற்குள் வந்து சேர்ந்துவிடும்.

(தொடர்ச்சி 36ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு தமிழ் அகதியின் பரிதாபக் கொலை

இலங்கையில் சுழிபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட யோகச்சந்திரன் என்பவர் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி பரிஸ் செயின் ஆற்றில் இனந்தெரியாத நபர்கள் மூவரினால் தள்ளப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இக் கொலை நிகழ்ச்சி பரிஸில் ஏற்கெனவே நடந்த தமிழ் பேசும் அகதித் தொழிலாளர்களின் ஏனைய கொலைச் சம்பவங்களையும் எங்களுக்கு நினைவூட்டுகின்றன.

வேலை முடிந்து இரவு 2.30 மணியளவில் களையுடன் வந்த யோகச்சந்திரன் வா யிஸ் பிளன்ஸ மெத்ரோவின் பின்புறமுள்ள ஆற்றங்கரையில் தனக்காகக் காத்திருந்த சிநேகிதருடன் உட்கார்ந்திருந்த வேளையில் இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களும் வந்து நேரங் கேட்டனர்.

நேரம் சொல்லி முடித்ததும் முதலில் யோகச் சந்திரன் ஆற்றில் தள்ளிவிடப்பட்டான். அடுத்து சிநேகிதன் சிவகுமாரையும் தள்ளி விழுத்தினர்கள்.

சிவகுமார் யோகச் சந்திரனைக் காப்பாற்ற எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. வெளியே வந்து பலமாக உதவி கேட்டுக் கத்திவிட்டு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு ஓடிச்சென்று விசயத்தைச் சொல்லியுள்ளார்.

அந்தக் கணத்தில் எந்தப் பொலிசும் சிவகுமாருடன் யோகச்சந்திரனைத் தேடி வரவில்லை. மறுநாள்தான் சிவகுமாருக்கு யோகச்சந்திரன் மரணமடைந்த செய்தி தெரியும்.

பரிஸில் இலங்கை அகதிகள் பலர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனல் இது விடயத்தில் பிரெஞ்சு பொலிஸ் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இங்குள்ள அமைப்புகள் கூட இந்த விசயத்தில் தலையிட்டு தகுந்த விசாரணைகளுக்காக பொதுசன ஏற்பாட்டில் எதையும்செய்ய முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

யோகச்சந்திரனின் படுகொலையும் ஏனைய படு கொலைகளைப்போல மறக்கப்பட்ட ஒன்ருக இருக்கக்கூடாது. இங்கு

(தொடர்ச்சி 19ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆண்ட பரம்பரையும் சிம்மாசனமும்

- தம்பா

கோடை இன்னமும்
வயல் நிலம் பிளந்து
வத்தல் போட்டபடியே.

தலைக்குமேல்
கோபமான சூரியனை மறந்து
கணுக்காண வைக்கும்
மந்திரம்தான் என்ன சொல்வீர்?

ஆதி தொட்டு
இந்தக் கணம்வரை
பூமி நனைக்கும்
இரத்தபலம் தான் என்ன?

நம்மூர்த் தெருக்களில்
அமைப்பான வண்டிகட்டி
அழகான
நாம்பன் மாடு பூட்டி
ஒன்றுபட்டு ஏற்றி வந்தனர்
'தமிழ் சிம்மாசனம்' காட்டி.

ஆராத்தியெடுத்து
ஆர்த்தெழுந்த ஆருத் தமிழன்
'ஆண்ட பரம்பரை
மீண்டும் ஆள நினைப்பதில்
என்ன தவறு?'
என மிடுக்கெய்தினன்.

www.tamilarangam.net

உச்சிக்கு எழுந்த சூரியன்
கதிர்கள் உதிரச் சிரித்தது.
பளபளத்த சிம்மாசனத்தில்
பட்டெறிந்த கதிர்
நெற்றிப்பொட்டில்
கை வைத்து அழுத்தியிருக்க
கால்கள் முறித்து ஓடினர்
ஒவ்வொரு திக்காலும் ஒவ்வொருத்தர்.

கால் இழந்த சிம்மாசனம்
குப்புறக் கிடந்தது தூசி நிலத்தில்
கூடவே மனிதவுடல்களும்தான்.

வெட்டுண்ட மானிடத் தலைகள்
நிலம் வீழ்ந்து உருண்ட கணத்தில்
தீப்பற்றிச் சாம்பல் பூண்டது.
தனயனின் கொய்த தலையெறிந்து
மகிழும் தம்பியும்,
தம்பியின் உருவிய குடல் எடுத்து
மாலை பின்னி
மகிழும் தனயனும் கண்டு
மூச்சையிழந்தன தெருக்கள்.

இனியென்ன வாருங்கள்.
மானிடச் சாம்பல் குழைத்து
அழகான சிம்மாசனம் வடிக்கலாம்.
சூழவே அழகான சுடுகாடு இருக்கு.

ஆண்ட பரம்பரை
மீண்டும் ஆளநினைப்பதில்
என்ன தவறு?

●

---

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)
ள்ள தமிழ் பேசும் மக்களும்,
அமைப்புகளும் இது விடயத்தில்
பிரெஞ்சு அரசிடம் ஒரு விசார
ணை நடத்துமாறு வற்புறுத்தவே
ண்டும் எனக் கேட்டுக் கொள்கி
ன்றோம்.

- நண்பர்கள் -

www.tamilarangam.net

# விமர்சனமும் விடுதலைப் பாதையும்

கலம் 34இல் வந்த தூண்டில் பற்றிய விமர்சனம் நேர்மையானது. ஆயினும் எழுதியோரின் எதிர்பார்ப்புகள் மிகையானவையாகவே உள்ளதால் அதில் சில தவறுகள் உள்ளன.

முதலாவதாக, ஐரோப்பாவிற் சிறு சஞ்சிகைகள் உருவான சூழலையும், அவை தொடர்ந்துஞ் செயற்படுவதில் உள்ள சிரமங்களையும் கணிப்பிலெடுத்தே அவை ஒவ்வொன்றிடமும் நாம் எதிர்பார்க்கக் கூடியதென்ன? என்ற ஒரு மதிப்பீட்டைச் செய்ய முடியும்.

பல சஞ்சிகைகட்கும் பின்னுள்ள சக்திகள் வெவ்வேறு இயக்கங்களினின்றும் வெளியேறிப் புதியதொரு விடுதலைப் பாதையைத் தேடும் இளைஞர்களாக-



வேயுள்ளனர். இதற்கு விலக்காக கருதக்கூடியன முக்கிய விடுதலை இயக்கங்களுக்குச் சார்பான ஏடுகளும், அவ்வாறான இயக்கங்களது பிரச்சார ஏடுகளுமே.

இவற்றில் ஒரு நிச்சயமான அரசியல் நிலைப்பாடு இருக்குமளவிற்கு இப் புதிய, பிரிந்துசென்ற சக்திகளின் முயற்சிகளில் இல்லை என்பது உண்மை.

இந்த நிச்சயமின்மைக்குக் காரணம் என்ன? அது முற்றிலும் தவறானதா? இப் பத்திரிகைகளையும், அவற்றின் பிரசுரிப்பாளர்களையும் பிற அரசியல் நிறுவனங்களுடன் ஒப்பிடுவது தகுமா? என்பன முக்கியமான கேள்விகள்.

அதேவேளை இப் பத்திரிகைகள் தொடர்ந்தும் தெளிவான ஒரு அரசியல் முனைப்பற்றுப் போய்க்கொண்டிருக்க முடியுமா என்பதும் நியாயமான கேள்வியே.

முதலில் இயக்கச் சார்பற்ற ஐரோப்பியத் தமிழ் சிறு சஞ்சிகைகளின் இதுவரை காலப் பங்களிப்பு என்ன? என்றும், இப் பங்களிப்பு ஏன் வரையறைக்குட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டதாக உள்ளது? என்றும் கவனிக்கவேண்டும்.

பின், இவற்றில் மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய அம்சங்களையும், நீக்கப்படவேண்டிய குறைபாடுகளையும் அடையாளங்காண வேண்டும்.

அதன் பின்னர், புதியதொரு விடுதலைப்பாதையை விருத்தி செய்வதில் இப் பத்திரிகைகள் எத்தகைய பங்களிப்புச் செய்யலாம் என்ற கேள்விக்குப் பதில் தேடமுடியும்.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் தமிழீழப் பிரிவினையையே இலக்காக கொண்டது என்ற ஊகம் பெருவாரியான விடுதலை இயக்கங்களைப் பாதித்திருந்ததினால், தமிழீழப் பிரிவினையை அவசியமானதும், முடிவானதுமான ஒரு தீர்வாகக் கருதாத அரசியற் சக்திகள் தமிழினத்தின் விடுதலைக்கு விரோதமானவையாகக் காணப்பட்டன.

சிங்கள இனம் முழுவதுமே தமிழர்களது அடக்குமுறைக்குப் பொறுப்பானது என்ற கருத்துக்கு விடுதலை இயக்கங்கள் அனைத்துமே பலியாகாதபோதும் சிங்களத் தலைமைகளின் கீழான சகல அரசியற் கட்சிகளும் இதுகாறும் சந்தேகக்கண்ணுடனேயே நோக்கப்பட்டன.

சிங்களத் தேசிய வாத அரசியற் கட்சிகள் மத்தியில் நிலவிய முக்கியமான வேறுபாடுகளையும் அலட்சியம் செய்து, தமிழர்களைப் பொறுத்தவரை எல்லாப் பேரினவாதமும் ஒன்றேதான் என்ற கருத்தும் பரவலாகியிருந்தது.

இதனை முற்று முழுதாக ஏற்காத இடதுசார்புடைய சில இயக்கங்கள் கூடச் சிங்களப்பேரினவாதத்தினிடையில் இருந்த முரண்பாடுகள் பற்றியும், பிரதான எதிரி யார்? அந்த எதிரியை எவ்வாறு தனிமைப்படுத்துவது? என்பன பற்றியும் அதிகம் நாட்டங்கொள்ளவில்லை.

விடுதலைப் போராட்டத்தை விரவிநின்ற ஒரு குறுகியதேசியவாதப் போக்கிற்குப் பல

## சி. சிவசேகரம்

இயக்கங்களும் பணியும் நிர்ப்பந்தம் முன்னைய காலங்களில் மேலும் வலுப்பெற்றது. பாராளுமன்ற இடதுசாரிகள் மட்டுமன்றிப் பிற இடதுசாரிச் சக்திகள்மீதும் அதேவிதமான ஐயங்களும், பகைமையுணர்வும் இருந்தன. இதற்கு இத்தகைய கட்சிகளின் பலவீனமான நிலையும், பழைய தவறுகள் சிலவும் உடந்தையாயின.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை - மாக்ஸியக் கட்சிகளின் நிலைப்பாட்டினின்று விமர்சித்தவர்கள் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டு

www.tamilarangam.net

கள், அவர்கள் கூறிய கருத்துகளைச் சரிவர ஆராயாமல் நிராகரிக்கும் நிலைக்குப் பலரைத் தள்ளின. தம்மை இடதுசாரி, மாக்ஸிஸ, சோசலிஸ.. விடுதலை இயக்கங்களாகக் காட்டிக்கொள்ளவிரும்பிய முன்வரிசை இயக்கங்களின் நடைமுறை சர்வதேச அரசியல் விவாதங்கள், ஏகாதிபத்தியம், மேலாதிக்கம் போன்ற விஷயங்களில் ஆழமான அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. அடிப்படையான முரண்பாடு தேசிய இனப் பிரச்சினையே என்ற நிலைப்பாட்டினால் ஏற்பட்ட தவறுகளில் இதுவும்ஒன்று.

இதிலும் முக்கியமான ஒரு தவறு ஆயுதமேந்திய போராட்டத்தையும், ஆயுத, ஆட் பலத்தையும் வலியுறுத்திய அளவுக்குப் போராட்டத்தை வெகுஜனப் போராட்டமாக விஸ்தரிப்பதிற் கவனங்காட்டப்படாமையாகும்.

இத் தவறுகளைச் சுட்டிக் காட்டிய குரல்கள் 1984 – 1987 கால இடைவெளியில் இருந்த வெற்றிச் செருக்கின் பின்னணியில் பலர் காதுகளில் விழவில்லை.

1987 வரையிற்கூட ஓரளவு முற்போக்கான முனைப்புடன் இயங்கிய சில முக்கிய இயக்கங்கள் இந்திய–இலங்கை உடன்படிக்கையையடுத்துப் பாரதூரமான தவறுகளை இழைத்தன.

முக்கிய இயக்கங்களுக்கிடையேயான மோதல் அதிகாரத்திற்கான மோதலாக வலுத்தது. வெகுஜன நலன்களை நிராகரித்துத் தம் அரசியல் வலிமையை வளர்க்கும் முறையில் இவ்வியக்கங்கள் செயற்பட்டதன் விளைவாக இவை மக்களிடமிருந்து தம்மை தனிமைப்படுத்திக்கொண்டன.

இன்றைய சூழலில் மக்கள் விடுதலைப் போராட்ட அரசியலில் ஏமாற்றமும், விரக்தியுமடைந்து சிறிது அமைதியைநாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதுவே தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தின் நிரந்தர நிலையாகிவிடமுடியாது.

இதினின்று தமிழ் மக்களை முன்னேக்கி வழிநடத்தும் ஒரு அரசியல் மார்க்கத்தைத்தேடும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

இதை மனதிற் கொண்டே இயக்கச் சார்பற்ற பல சிறு சஞ்சிகைகள் செயற்படுகின்றன என்று நான் நம்புகிறேன். இந்த வகையில் இச் சஞ்சிகைகளின் சாதனைகளை நாம் மதிப்பிடுவோமாயின், இவற்றின் முக்கிய பங்களிப்பு விடுதலைப் போராட்டம் பற்றிய விமர்சனம் எனலாம். இவ் விமர்சனம் சில சமயங்களிற் குறிப்பிட்ட சில இயக்கங்கள் பற்றியதாக இருந்தாலும், அது உண்மையில் விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய சுய விமர்சனத்தின் முக்கியமான பகுதியேயாகும்.

சில இயக்கங்கள் விமர்சனத்தை முற்றாக வெறுக்கின்றன.

www.tamilarangam.net

விமர்சனத்தை ஒழிக்க விமர்சகர்களையே இல்லாதொழிக்கும் நடைமுறைகளில் இறங்குகின்றன.

இலங்கையில் செயற்படும் முற்போக்கான அரசியற் சக்திகள் குறிப்பிட்ட சில சக்திகளுடன் முரண்படும்போது மிகுந்த கொடுமைகட்கு உள்ளாவதால் அவற்றால் மிகவும் வரையறைக்குட்பட்டே செயலாற்ற முடிகிறது.

இதனுடன் ஒப்பிடுகையில் ஐரோப்பாவில் உள்ள முற்போக்கு விடுதலை சக்திகட்குக் கூடுதலான கருத்துச் சுதந்திரம் உண்டு. ஆயினும் குறிப்பிட்ட சில இயக்கத்தினர் இதற்குத் தடையாகச் செயற்படுவதை நாமறிவோம்.

இன்று பல சிறு சஞ்சிகைகள் முக்கிய இயக்கங்களை விமர்சித்து எழுதக்கூடிய நிலையும் இவ்வாறான சஞ்சிகைகளைப் பரவலாக விநியோகிக்கும் நிலையும் உருவாகியுள்ளதென்றால் இத்தகுதியைப் போராடி வென்ற சிறு சஞ்சிகை வெளியட்டாளர்கட்கே இப்பெருமை சாரும். இவ்விடத்து கனடாவிலிருந்து வெளிவரும் 'தாயகம்' கருத்துச்சுதந்திரம் வேண்டி நடத்திய துணிவான போராட்டம் குறிப்பிடத்தக்கது.

இது மட்டுமன்றி விடுதலை போராட்ட இயக்கங்கள் வாயளவில் வரவேற்று, பண்பாட்டின் பேரால் நடைமுறையில் அடைத்துமூட முற்பட்ட பெண்ணுரிமைப் பிரச்சினையிலும் சிறு சஞ்சிகைகள் பயனுள்ள பங்காற்றியுள்ளன. இப் பத்திரிகைகள் தாம் பெண்ணுரிமைப் போராட்டத்தை ஆதரிப்பதோடு பெண்ணிலைவாத ஏடுகளை ஊக்குவிக்கும் முறையிலுஞ் செயற்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

புதிய சுதந்திரமான சிந்தனையையும், விமர்சனத்தையும், சர்வதேச நிலவரங்கள் பற்றிய ஆர்வத்தையும், விரிந்தவொரு இலக்கிய நோக்கையும் வளர்க்கும் வகையிற் சிறுசஞ்சிகைகள் இதுவரை ஆற்றியுள்ள பங்கு மிகப் பாராட்டத்தக்கது.

ஒவ்வொரு ஏடும் அதன் உடனடியான சூழலுக்கும், அதன் வெளியீட்டாளரின் உலகப் பார்வைக்கும், பக்குவத்திற்குமேற்பப் பலவகைகளில் பங்களித்துள்ளது. குறைபாடுகட்கு அப்பாற்பட்ட ஏடுகளை நாம் தேடமுடியாது. குறைபாடுகள் நீக்க கூடியனவா இல்லையா என்பதை நாம் கருத்திற் கொள்வது அதிகம் பயனுள்ளது.

இலக்கியம், அறிவியல், சமூகவியல், அரசியல், தகவல், பெண்ணிலைவாதம்.. போன்ற பல்வேறு அம்சங்களில் பத்திரிகைக்குப் பத்திரிகை வெவ்வேறு அளவில் அழுத்தங்கொடுக்கக் காணலாம். அழுத்த வேறுபாடு எவ்வகையிலும் தவறானதல்ல.

ஒவ்வொரு பத்திரிகையினதும் அரசியல் முனைப்பும், பார்வையின் ஆழமும் வேறுபடுவது இயல்பானது. இயக்கச் சார்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ற்ற ஏடுகளில் வரும் அரசியல் ஆய்வுகளில் விமர்சனப் பார்வையும், விவாதிக்கும் தன்மையும் – மேலோங்கி நிற்பது நாம் எதிர்பார்க்கக் கூடியதே. இது தவறென்று நான் கருதவில்லை.

விடுதலைப் போராட்டம் என்ற பேரில் சுயாதீனமானசிந்தனையையும், விமர்சனத்தையும் நசுக்கிவந்த சூழலிலிருந்து நாம் விடுபடவேண்டியுள்ளது.

ஐரோப்பிய சிறு சஞ்சிகைகள் கருத்துச் சுதந்திரத்திற்கு அமைத்துள்ள களம் இன்றைய சூழலில் மிகப் பெறுமதி வாய்ந்தது. இச் சஞ்சிகைகள் எப்போதைக்குமே விவாதமேடைகளாக இருக்கவேண்டுமா?என்பது இன்னொரு கேள்வி. அதற்கான பதில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் எவ்வாறு விருத்தியடைகிறது என்பதைப் பொறுத்ததே.

ஒரு சிற்றேடு தன்னை – ஒரு புதிய அரசியற் போக்கின் முன்னோடியாக அமைக்கவோ அன்றி ஒரு விடுதலைப் போராட்ட அணியின் போக்குடன் இணைத்துக்கொள்ளவோ முடியும். அதற்கான சமுதாய நிலைமைகள் உருவாகும்போது மட்டுமே இது சாத்தியமாகும்.

அல்லாத நிலையில் அரசியற் கருத்துகளில் வேறுபாடு-கொண்ட, ஆனால் ஒரு பரந்துபட்ட ஒருமையுடைய சிலர் தம்மை வலிந்து ஒரு அரசியற்சக்தியாக அமைக்க முற்படுவது சில சமயம் பாதகமான விளைவுகளையே தரமுடியும்.

ஐரோப்பியத் தமிழ் சஞ்சிகைகள் இலங்கையினுள் நிகழும் மாற்றங்களுடனும், விருத்திகளுடனும் தம்மை இணைக்க முடியும். அங்கு இன்றைய அடக்கு முறைகளினதும், அடாவடித்தனத்தினதும் மத்தியில் செயற்படும் பல்வேறு முற்போக்கு, ஜனநாயக, விடுதலை போராட்ட சக்திகளது சமுதாய நடைமுறையுடன் தம்மை நெருக்கமாகப் பிணைத்துக்கொள்ள முடியும். பரந்த வெகு ஜன அடிப்படையிலான ஒரு முன்னணி-யையும், ஒரு ஜனநாயக, மனித உரிமைப் போராட்டச் சக்தியையும் கட்டியெழுப்பும் பணியில் பங்களிக்கமுடியும்.

இவை எல்லாம் அவசரப் பட்டுச் செய்யக்கூடிய காரியங்களல்ல. இணையக்கூடிய சக்திகளை இனங்காண்பதும், இணைவின் அடிப்படையைத் தீர்மானிப்பதும் இலங்கையின் நடைமுறை அரசியலின் பிரச்சினைகள். எனினும் சிற்றேடுகளுக்கு இவ் விசயத்தில் ஆக்கமான பங்களிக்க இயலும். தமது போராட்டத்தின் எதிர்கால முனைப்புப் பற்றிய விவாதம் ஆரம்பிக்கப்படுவது ஒரு நல்ல முயற்சியாகவே இருக்கும். இந்த வகையில் தூண்டில் பற்றிய விமர்சனம் எழுப்பியுள்ள பிரச்சினை வரவேற்கத்தக்கதே.

அதேசமயம் புத்திஜீவிகள் மத்தியில் உள்ள கண்ணோட்டங்கள்

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




01.10.90 வீரகேசரி

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமுக்கு வந்த ஆயுதபாணிக்குழுவொன்று முகாமிலிருந்த அனைவரையும் உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிட்டதையடுத்து அங்கிருந்த 46ஆயிரத்திற்கும் அதிகமான அகதிகள் வெளியேறியுள்ளனர். அகதி முகாமில் இருக்கமுடியாமலும், சொந்த வீடு, வாசல்களுக்குச் செல்ல முடியாமலும் இருக்கும் இந்த நிலையில் எங்குசெல்வதென்று தெரியாமல் மக்கள் தத்தளிக்கின்றனர். பெரும்பாலானோர் மட்டக்களப்பிற்கும், படுவான்கரைப்பக்கமுள்ள காட்டுப் புறங்களுக்கும் சென்றுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளரும், அகதி முகாமுக்குப் பொறுப்பாயிருந்தவருமான டாக்டர் சிவலிங்கம் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் முதல் கிழக்கில் நிகழும் வன்செயல்களினால் நாளுக்கு நாள் நூற்றுக் கணக்கான அப்பாவிமக்கள் உயிரிழந்துகொண்டிருக்கின்றனர். அவர்களில் கணிசமானளவு இந்தியவம்சாவழி மக்களும் அடங்குவர்.

இராணுவத் துணைப்படைக்கு மேலும் ஆட்கள் திரட்டப்படுகின்றனர். இதற்கு அனுசரணையாக துணையாட்படையின் எண்ணிக்கையை 50ஆயிரமாக அதிகரிக்கும் கெஸட் பிரகடனம் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது.

வறுமை காரணமாக இந்துருவை என்ற இடத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

மலையகத் தோட்டப் பகுதிகளில் தாய், சேய் பிரசவ மரணங்கள் ஏனைய இடங்களைவிடக் கூடுதலாக நடைபெறுகின்றன. கிராமப்புற மகப்பேற்று வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் வண்டிகள் இல்லாத காரணத்தினால் மேலதிக வைத்திய சிகிச்சைக்காக ஆதாரவைத்தியசாலைகளுக்குக் கொண்டுசெல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

02.10.90 வீரகேசரி

அம்பாறை மாவட்டம் மகா ஓயாப் பகுதியில் கிராமமொன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் 1 குழந்தை, 2 பெண்கள் உட்பட 7பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சித்தாண்டி முருகன் ஆலயம், கிரான் ஆச்சிரமம், கோரகல்லிமடு பாடசாலை ஆகியவற்றில் தங்கியிருந்த அகதிகளும் ஆயுதபாணிக்குழுவொன்றின் அச்சுறுத்தல் காரணமாக அங்கிருந்து முற்றாக வெளியேறிவிட்டனர். மேற்படி 4 முகாம்களிலிருந்தும் வெளியேறிய 65ஆயிரம் அகதிகள் தற்போது நிர்க்கதியாகியுள்ளனர்.

எல்கடுவ தமிழ் வித்தியாலய மாணவ மாணவிகள் தங்களின் ஜூலை மாத மதிய உணவுத் தொகையிலிருந்துரூபா 5,502ஐ தேசிய பாதுகாப்பு நிதிக்காகக் கொடுத்துதவியுள்ளனர்.

ஆயுதங்களைப் பற்றியே அறியாத அப்பாவிக் கிராமவாசிகளான தமிழர்களை சிசுக்களென்றும், வயோதிபர்களென்றும் பாராமல் ஈவிரக்கமின்றி நூற்றுக் கணக்கில் கொன்ற முஸ்லீம் ஊர்காவற்படை உடனடியாகக் கலைக்கப்படவேண்டும் – ஈ.என்.டி.எல்.எவ்.

03.10.90 வீரகேசரி

கல்முனைக் கடற்கரையில் 1 பெண் உட்பட 5 தமிழர்களின் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

மருதமுனையில் வைத்து 2 முஸ்லீம் வர்த்தகர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

04.10.90 வீரகேசரி

பொலிஸ், இராணுவத்தில் முஸ்லீம்கள் சேரவேண்டும் – வணிகத்துறை அமைச்சர் மன்சூர்

மலையக உழைக்கும் மக்களுக்குரிய வாழ்வை அளிக்கவேண்டுமானால் அர்த்தம் பொதிந்த நடவடிக்கைகளும், போராட்டங்களும் வேண்டும். இதைவிடுத்து காகிதம் அடித்து அனுப்புவதாலோ, தொலைபேசியில் பேசிக்கொள்வதாலோ எதுவும் நிகழப்போவதில்லை. உரிமைகளைப் பெற நடத்தவேண்டிய போராட்டங்களின் மூலமே உலகப் பாட்டாளி வர்க்கம் உரிமைகளைப் பெற்றிருக்கின்றது. ஆனால் நமதநாட்டில் அதவும் மலையகத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில் மக்கள் மத்தியில் கடுதாசிப் போராட்டம்தான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதனால் காலந்தான்போய்முடிந்ததே தவிர தொழிலாளர் வாழ்க்கையில் விடிவு ஏற்படவில்லை. –மலையக தொழிலாளர் முன்னணி உப தலைவர் தருமலிங்கம்

05.10.90 தாயகம்

ஈ.பி.டி.பி. தலைவரான டக்ளஸ் தேவானந்தா புலிகளுக்கு எதிரான எல்லா இயக்கத்தினருக்கும் அரசு ஆயுதம் வழங்கியுள்ளதாகவும், ஊர்க்காவற்துறையில் இராணுவத்துடன் இயங்கிவரும் தாம் தமது பாதுகாப்புக்கென அரசினால் வழங்கப்பட்ட ஆயுதங்களை புலிகளை அழிக்க பயன்படுத்துவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார் வவுனியா மாவட்டத்தில் இயங்கிவரும் புளொட்டும் அரசு தமக்கு ஆயுதங்கள் அளித்ததை உறுதி செய்துள்ளது. இதேபோல் கிழக்கில் ஈ.பி.ஆர். எல்.எவ், டெலோ குழுக்களுக்கும் அரசு ஆயுதம் வழங்கியுள்ளது.

புலிகளின் விசாக் காட்டை பணம் கட்டிப் பெற்றுக்கொண்டு அதைக் காட்டியே வவுனியாவுக்கு வர முடியும். அப்படியில்லாமல் ஒளித்து வருபவர்கள் பிடிக்கப்பட்டால் அவர்களுக்கு 4 மாதச் சிறைத்தண்டனை புலிகளால் வழங்கப்படுகிறது.

ஈராக் படையில் பணியாற்றுவதற்கென ஆயிரம் இலங்கையர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக இலங்கைக்கான ஈராக் தூதவர் தெரிவித்துள்ளார். தெரிவு செய்யப்பட்டவர்கள் விரைவில் ஈராக் அனுப்பி வைக்கப்படுவர்.

05.10.90 வீரகேசரி

எதிரும்.புதிருமாகப் பிரிந்திருந்த கிழக்கு, மேற்கு ஜேர்மனிகள் இப்பொழுது ஒன்றாக இணைந்திருப்பது போல வடக்கிலுள்ள புலிகள் அரசாங்கத்தோடு இணைந்து செயலாற்ற முன்வரவேண்டுமென பிரதமரும், நீதியமைச்சருமான விஜேதுங்க பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதியில் உள்ள அகதி முகாம்களிலிருந்து 75,000க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் வெளியேறியமைக்கு எல்.ரி.ரி.ஈ.யே முழுக் காரணம் என்பதற்கு ஏராளமான சான்றுகள் எமக்குக் கிடைத்துள்ளன. தமது வீடு, வாசல்களைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட இந்த அநாதரவான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் மனித வாழ்க்கைத் தரத்திற்கு குறைவான நிலைமைகளிலேயே அகதி முகாம்களில் வாழ்க்கை நடத்தி வந்தாலும் ஒரு கூரைக்குக் கீழே வாழ்வதற்காவது அங்கே வசதியிருந்தது. ஆனால் இப்போது காடுகளிலும், வயல்களிலும் அலைந்து திரியவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் இந்த அப்பாவிப் பொதுமக்கள் இயற்கையின் கருணையை நம்பியும், எந்தவொரு நிலைமைக்கும், எந்த நேரத்திலும் ஆளாகக்கூடிய சூழ்நிலையிலும் அநாதரவாக விடப்பட்டிருக்கிறார்கள். டெலோ

மகாவலித் திட்டத்தின் 'பி' வலயப் பகுதியின் ஒரு பிரிவான கலிக்காவில குடியேற்றத் திட்டத்தில் 105 விவசாயக் குடும்பத்தினர் குடியேற்றப்பட்டுள்ளனர். இந்தக் குடியேற்றங்களுக்குப் பொலிஸ், இராணுவப் பாதுகாப்புகளும் வழங்கப்படவிருக்கின்றன. ஆங்காங்கே இராணுவ முகாம்களும் திறக்கப்படவிருக்கின்றன.

நாவலப்பிட்டியில் வியாபாரத்திலீடுபட்டிருந்த கல்முனைப்பகுதி 8 வாலிபர்கள் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

திருமலை அகதி முகாம்களில் வைத்து 203 தமிழர்கள் ஆயுதப்படையினராலும், முஸ்லீம் ஊர்க்காவற்படையினராலும் கைது செய்யப்பட்டுள்ளனர். அகதிகள் ஆயுதப்படையினரின் வேலைகளைச் செய்வதற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஆனால் 1 சதம் கூட இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அகதிமுகாம்களில் 8 குழந்தைகள் வயிற்றோட்ட நோயால் இறந்துள்ளன

கோமாரி கிராமத்திலுள்ள அகதி முகாமிலுள்ள 3,100 அகதிகள் வைத்திய வசதிகள் எதுவுமின்றி கஷ்டப்படுகின்றனர். தொற்றுநோய் பரவிய பலர் மருத்துவ வசதிகளின்றி இறந்துள்ளனர்.

06.10.90 வீரகேசரி

திருகோணமலை மாவட்டத்தில் சுதந்திர வர்த்தகவலயம் உருவாக்கப்படும் – பிரேமதாச

08.10.90 வீரகேசரி

தமிழர் அரசியற் கட்சிகள் சகோதர முஸ்லீம் சமுதாயத்தின் உணர்வுகள், அபிலாசைகளை இன்னும் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றன. இந்த நிலைமை மாறும்வரை நிரந்தர அரசியற் தீர்வுக்கு இடமிருக்காது–அஷ்ரப்

ஆயுதக்குழுவொன்றின் அறிவிப்பைத் – தொடர்ந்து வாழைச்சேனைப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ்க் குடும்பங்கள் காட்டுப்பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்துள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழர் ஆயுதக்குழுக்கள் எமது சமுதாயத்தின் மீது கைவைக்காதிருந்தால், சகோதரர்களாக எம்மை மதித்திருந்தால் நிச்சயமாக இணைந்த மாகாண அமைப்பில் செயற்பட்டிருப்போம். எமது மக்களைக் கொன்றபின், பள்ளிவாசல்களுக்குள் புகுந்து படுகொலை புரிந்தபின்னர், வீடுகளை எரித்து, உடைமைகளைக் கொள்ளையடித்த பின்னர்தான் நாம் தனிமாகாணசபைக் கோரிக்கையை முன்வைக்க நேரிட்டது. இன்று முஸ்லீம் சமுதாயம் தன்னைப் பாதுகாக்க ஆயுதமேந்தும் நிலைமையை உருவாக்கியவர்கள் தமிழ்ப் போராளிக் குழுக்களே – முஸ்லீம் காங்கிரஸ் தவிசாளர் சேகுஇசடீன்

09.10.90 வீரகேசரி

இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்றவர்கள் 2 வாரங்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும். அவ்வாறு வெளியேறத் தவறுவோர் வேலையிழந்தவர்களாகக் கருதப்படுவர் என்ற அறிவிப்பு அட்டன் பகுதியைச் சேர்ந்த தோட்டக்காரியாலயம் ஒன்றில் அறிவித்தல் பலகையில் காணப்படுகிறது.

வல்வெட்டித்துறையிலிருந்து தமிழ்அகதிகளை ஏற்றிக்கொண்டு தமிழகம் – நோக்கிப் புறப்பட்ட படகு ஒன்று தனுஸ்கோடியில் கவிழ்ந்ததில் அதில் பிரயாணம் செய்த 17பேர் மரணமாகினர்.

இந்த நாட்டிலுள்ள சகல இடதுசாரிகளுக்கும் கிடைக்கும் வாக்கைவிடதற்போது தொண்டமானின் பொக்கட்டில் 30 இலட்சம் வாக்குகள் உள்ளன – அதரா

புங்குடுதீவில் வரட்சியின் கொடுமை–யால் மக்கள் பெரும் அவதியுறுகின்றனர். 1 கலன் குடிதண்ணீர் 2 ரூபா வீதம் விற்பனையாகிறது.

10.10.90 வீரகேசரி

இ.தொ.கா. என்ற மாபெரும் – தொழிற்சங்கத்தின்மீது நம்பிக்கை வைத்துள்ளபடியால் சண்டைப் பயிற்சியில் எமக்கு அக்கறையில்லை –தொண்டமான்

கொழும்பு செல்வதற்காக யாழ் குடாநாட்டிலிருந்து வவுனியாவுக்கு வந்திருக்கும் மக்களின் தொகை பத்தாயிரத்தையும் தாண்டியுள்ளது.

யாழ்குடாநாட்டிலிருந்து மக்கள் வெளியே செல்வது தொடர்பாக புலிகளால் தற்காலிகமாக நீக்கப்பட்டிருந்த 'பாஸ்'முறை மீண்டும் அமுலுக்குக்கொண்டுவரப்பட்டுள்ளது.

மலையக மக்களை தமிழ்த் தேசிய இனமாக அங்கீகரிக்கவேண்டும். இதற்கான கோரிக்கையை நாம் மட்டுமே சர்வகட்சி மகாநாட்டில் முன்வைத்துள்ளோம் – இ.தொ.கா. தலைவர் கணேசன்

11.10.90 வீரகேசரி

புலிகளுடன் அரசு நிபந்தனை எதுவுமின்றிப் பேசமுடியாது எனவும், புலிகள் ஆயுதங்களைக் கையளித்தாலே–யே மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்தமுடியும் எனவும் பாதுகாப்புஅமைச்சர் ரஞ்சன் தெரிவித்துள்ளார்.

12.10.90 வீரகேசரி

கொழும்பில் திடீர்ச் சோதனை நடத்திய பொலிசார் 200 தமிழ் வாலிபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

12.10.90 தாயகம்

புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் மீண்டும் சமரசப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் உத்தியோகப் பற்றற்ற நிலையில் நடைபெறுவதாகக்–கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கல்குடா, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் சுமார் 20பேர் இராணுவத்தினராலும், ஊர்காவற்படையினராலும் கைது செய்யப்பட்டுள்ளனர். வாழைச்சேனைப் பகுதி ஊர்காவற் படையினரால் 20 தமிழர்கள் கடத்தப்பட்டுள்ளனர். கடத்தப்பட்டவர்களில் இருவர் நாசிவன்தீவு ஆற்றில் சடலங்களாக மீட்கப்பட்டனர். இராணுவத்தினரால் 180 தமிழர்கள் வா–ழைச்சேனை சந்தைகளில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

13.10.90 வீரகேசரி

தோட்டத் தொழிலாளி ஒருவர் தோட்ட உதவியதிகாரியால் தாக்கப்பட்டது காரணமாக சுமார் 2ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

காரைதீவு கிராமத்தில் ஜூன்மாதம் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட 73இற்கும் மேற்பட்டவர்களின் நிலைமை குறித்து இதுவரை தெரியவரவில்லை.

14.10.90 வீரகேசரி

இன்னும் 2 மாதங்களில் வடக்குக், கிழக்குத் தவிர்ந்த ஏனைய 7 மாகாணங்களிலும் குட்டிப் பொதுத்தேர்தல்களை நடாத்துவதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடக்கு, கிழக்குக்கு கப்பல் மூலம் உணவுப் பொருட்களை அரசாங்கம் அனுப்பினுலும் அவற்றை வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லை. வங்கிகள் செயற்படாததால் மக்கள் கையிலே பணப்புழக்கமும் இல்லை.

வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுத்து எமது நாட்டை சர்வதே வர்த்தக, வாணிப நிலையமாக மாற்றியமைக்கும் நோக்கிலேயே வங்கி தொழிற்சட்டத்திற்கு திருத்தத்தை அரசுகொண்டுவந்துள்ளது. இரகசிய இலக்க வங்கிக் கணக்குகளை வர்த்தக வங்கிகளில் பேணுவதற்கு வகை செய்வதன் மூலமாக மேலும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை எம்மால் கவர்ந்திழுக்கமுடியும்— வர்த்தக, வாணிப அமைச்சர்

15.10.90 வீரகேசரி

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தற்போது இடம்பெற்றுவரும் யுத்தம் நிறுத்தப்பட்டு இலங்கை அரசு புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். இதற்கு வசதியாக யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என மட்டக்களப்பில் நடைபெற்ற சமாதானக்கூட்டத்தில் வைத்து தமிழ், முஸ்லீம் பிரமுகர்கள் ஏகோபித்த வேண்டுகோள் விடுத்தனர்.

இலங்கையில் சிவில் உரிமைகள் இயக்கத்திற்கு கார்ட்டர்—மெனில் மனித உரிமை விருது வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர், கோண்டாவில், கொக்குவில் திருநெல்வேலி பகுதிகளில் 3 பொம்பர்கள் நடாத்திய குண்டு வீச்சில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. ஒரு தாயும், 2 குழந்தைகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

அல்லைப்பிட்டித் தேவாலயத்திலிருந்து படையினரால் கைது செய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்ட 46 இளைஞர்களின் கதி என்ன என்பது தெரியாமல் மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த பெற்றோர் கவலை கொண்டுள்ளனர்.

ஜனாதிபதியினால் இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வைக் காணமுடியும் என நாம் நம்புகிறோம் — ஈ.பி.டி.பி

காரைதீவில் சுமார் 30 அப்பாவிப் பொதுமக்கள் அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

16.10.90 வீரகேசரி

எமது நாட்டு அரசியல்வாதிகளில் குறிப்பிட்ட ஒரு சிலரைத் தவிர அநேகமானோர் இனவாதக் கொள்கையையும், குறுகிய அரசியல் நோக்கத்தையும் அடிப்படையாகக்கொண்டே செயற்பட்டு வந்துள்ளார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் மட்டுமே கண்ணும், கருத்துமாக இருந்தார்களே தவிர நாட்டினதும், நாட்டு மக்களினதும் எதிர்கால விளைவுகளை சிந்தித்துப் பார்க்கத் தவறிவிட்டார்கள் —தோட்டத் தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளர்

கிழக்கு மாகாணத்தில் கோயில் காணிகளிலும், தமிழ் மக்களது காணிகளிலும் மேற்கொள்ளப்படும் காணிக்குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும். அதேவேளை அகதி முகாமுக்குள் இராணுவ நடமாட்டம் தவிர்க்கப்படவேண்டும் —ஐ.தொ.கா. பொதுச்செயலாளர்

அரச கூட்டுத்தாபனங்களை மக்கள் மயப்படுத்துவது, தனியாருக்கு விற்பதற்கேயாகும். இவை உலக வங்கியை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன — சிறிமா

சவளக்கடையில் உள்ள தங்கள் வயலுக்கு அறுவடை செய்யச் சென்ற 6 பேர் இன்னமும் வீடு திரும்பவில்லை.

மண்டூர் தம்பலவத்தையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையையடுத்து அப்பகுதியில் 5 இளைஞர்கள் காணமற் போயுள்ளனர்.

17.10.90 வீரகேசரி

மட்டக்களப்பில் உள்ள பெரிய கல்லாறு எனும் இடத்தில் புலிகளினால் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் 35 வயதிற்குட்பட்ட ஆண்களும், பெண்களும் புலிகளது கட்டாய இராணுவப் பயிற்சிக்கு உட்படவேண்டுமென்ற அறிவிக்கப்பட்டுள்ளது. திருமணமான ஆண்களும் பெண்களும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. மட்டக்களப்பிலுள்ள கொக்கட்டிச்சோலையில் 106 பெண்களும், மண்டூர், போரதீவு, பழுகாமம் ஆகிய இடங்களிலிருந்து 145 பெண்களும், திருமணமானவர்கள் உட்பட புலிகளினால் கட்டாயப் பயிற்சிக்காகக் கடத்தப்பட்டுள்ளனர். இதனால் அகதி முகாம்களிலுள்ள பெண்கள் கொழும்புக்கு தப்பியோடி வந்துள்ளனர்.

எம்மிடமிருந்து தப்பியோட தமிழர்களை அனுமதிக்க முடியாது —பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடந்த கூட்டத்தில் புலிகளைச் சேர்ந்த — தேவா.

19.10.90 தாயகம்

ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ்வாலிபர்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இயக்கங்கள் தடை செய்யப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னர் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பியிருந்த இவர்கள் தமது தனித்த லைமைக்கு இடையூறாக இருப்பார்கள் என்று கருதியதாலேயே புலிகள் மேற்படி படுகொலைகளைச் செய்துள்ளனர். கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ள பலர் புளொட் அமைப்பைச் சேர்ந்தவர்கள். டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை, தமிழ்த் தேசிய விடுதலை முன்னணி ஆகியவற்றின் முன்னாள் உறுப்பினர்களும் கடத்தப்பட்டுள்ளார்கள். இவ்வாறு கடத்தப்பட்ட பலரின் பெற்றோர்கள் திருநெல்வேலிக்கு அழைக்கப்பட்டு அங்கு அவர்களின் பிள்ளைகள் கொல்லப்பட்டதாக பெயர்ப்பட்டியல் வாசிக்கப்பட்டது. கொலை செய்யப்பட்ட சிலரின் உடல்கள் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டதாகவும், அவர்களின் இறுதிக்கிரியைகள் அமைதியானமுறையில் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், இது குறித்து பிரச்சினைகள் எழக்கூடாது என்றும் புலிகள் பெற்றோரை மிரட்டியுள்ளனர்.

எட்டாம் வகுப்பு படித்தபின் ஒன்றில் புலிகளில் சேரவேண்டும் அல்லது விவசாயம் செய்யவேண்டும் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

இலங்கையின் அடுத்த வருடப் பாதுகாப்புச் செலவினத்திற்கு 12 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது இலங்கையின் மொத்தச் செலவின் சுமார் 12.5 வீதமாகும்.

ஈரோஸ் தலைவர் பாலகுமார் புலிகளின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஈரோஸ் உறுப்பினர்களுக்கு மட்டும் அவரைக் காண அனுமதியளிக்கப்பட்டு வருகிறது.

20.10.90 வீரகேசரி

வடக்கு, கிழக்கு இணைப்புத் தொடர்பாக தமிழ், முஸ்லீம் கட்சிகளிடையே

ஏற்பட்டிருக்கும் இழுபறியைச் சுமுகமாக தீர்க்குமுகமாக இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண அமைப்பின்கீழ் தனித்துவமாக இரண்டு பிராந்திய அமைப்புகள் நிறுவுது என்ற புதிய யோசனையை 6 தமிழ் அரசியற்கட்சிகள் முன்வந்துள்ளன.

இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு மூடப்பட்டாலும் இஸ்ரேலியர்கள் இந்த நாட்டில் தொடர்ந்தும் இருக்கின்றனர். மொசாட் ஒரே இடத்தில் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் பயிற்சி கொடுத்தாக ஒஸ்ரோவ்ஸ்கி என்பவர் இலங்கையில் — மொசாட் நடவடிக்கைகள் என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார் — இலங்கையை இஸ்ரேலியர்களிடமிருந்து பாதுகாக்கும் அமைப்பின் பொதுச் செயலாளர்.

23.10.90 வீரகேசரி

புனர்வாழ்வு முகாமில் பலமாதகாலமாக இருந்து விடுதலையாகும் தென்னிலங்கை இளைஞர்கள் பலர் வீட்டிலிருந்து இனந்தெரியாத நபர்களினால் கடத்திச்செல்லப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். மற்றும் சிலர் காணாமற் போயுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மகாவித்தியாலயத்தில் புலிகள் நடத்திய கூட்டமொன்றில் பேசிய முள்ளியவளைப் பொறுப்பாளர் பிரசாத் 15 வயதிற்கு மேற்பட்ட சகலரும் கட்டாயமாகப் பயிற்சி பெற வேண்டும் என்று கூறியுள்ளார்.

சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சவளக்கடை, அன்னமலை, நாவிதன்வெளி, 9ஆம்கொலனி 15ஆம் கொலனி ஆகிய கிராம மக்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ளனர். கடந்த 4 மாதங்களாக இப் பகுதி மக்களுக்கு எதுவித அரச நிவாரணமோ, தனியார் நிவாரணமோ கிடைக்கவில்லை.

மட்டக்களப்பு வாவியில் மீன் பிடித்து கொண்டிருந்த 6பேர் சீருடை அணிந்தவர்களால் அழைத்துச் செல்லப்பட்டதாகவும், இன்னும் விடுதலை செய்யப்படவில்லை என்றும் தெரிய வருகிறது.

24.10.90 வீரகேசரி

கண்டி நகரில் உள்ள தமிழர்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்களில் நடத்தப்பட்ட சோதனையின் போது சுமார் 25 தமிழ் இளைஞர்களைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர். இவர்கள் அனைவரும் மலையகத்தைச்சேர்ந்தவர்கள்.

பொத்துவில் பகுதியிலிருந்து அச்சம் காரணமாக வெளியேறிப் பின் தங்களது இருப்பிடங்களுக்குத் திரும்பிய அகதிகள் மீண்டும் தங்கள் வீடு, வாசலை விட்டு கோமாரி அகதி முகாமுக்குச் சென்றுள்ளனர். பொத்துவில் பகுதியைச் சேர்ந்த முஸ்லீம் விவசாயிகள் அண்மையில் காட்டுப் பகுதியிலுள்ள வயலுக்குச் சென்றபோது இனந்தெரியாதவர்களினால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து தமிழ் மக்களின் வீடுகள் நாசப்படுத்தப்பட்டுள்ளன.

26.10.90 தாயகம்

மட்டக்களப்பை அடுத்துள்ள ஆரமுகத்தான் குடியிருப்பு எனுமிடத்தில் 33 பேர் வெட்டியும், சுட்டும் கொல்லப்

www.tamilarangam.net

பட்டுள்ளனர். இக் கொலைகளை அரசபடையினரே செய்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இலங்கையில் இருந்து இந்தியாசென்ற அகதிகள் தமக்குக் குடும்பக்கட்டுப்பாடு சத்திர சிகிச்சைசெய்து அதனால் கிடைக்கும் பணத்தில் உயிர்வாழ்கின்றனர்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு சர்வதேச நாணயசபை250கோடி ரூபா கடனுதவியளிக்க உறுதியளித்துள்ளது. இப் புதிய கடனுதவியுடன் இலங்கைக்கான சர்வதேச நாணயசபையின் மொத்தக்கடனுதவி சுமார் 15 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

இந்தியா சென்றுள்ள அகதிகளான — பெண்கள் பொருளாதார நெருக்கடியால் விபச்சாரத்தில் ஈடுபடுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. உணவு குழந்தைகளுக்கான மருந்து போன்றன இல்லாத காரணத்தினால் இந்த துயரநிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

26.10.90 ஐலண்ட்

பொதுமக்கள் படுக்கையில் வைத்து கடத்தப்படுவதும், சித்திரவதையின்பின் கொல்லப்படுவதும், தீ மூட்டி எரிக்கபடுவதும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. பச்சைப்புலிகள், கறுப்புப் பூனைகளே இதற்கு காரணம்— சிறிமா

வவுனியா, மன்னார், யாழ் மாவட்டங்களிலிருந்து முஸ்லீம்கள் உடனடியாக — வெளியேறிவிடவேண்டும் என்று புலிகள் அறிவித்ததையடுத்து ஆயிரக்கணக்கில் முஸ்லீம்கள் குழந்தைகளுடன் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

25.10.90 வீரகேசரி

வவுனியாவில் 3 பிள்ளைகள், 3 பெண்கள் உட்பட 10 சிங்களக் கிராமவாசிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு ஈரோஸ் இயக்கப்— பொறுப்பாளர் பாப்பா புலிகளினால் கட்த்திச் செல்லப்பட்டுள்ளதாகவும், சக அமைப்பொன்றின் தாயும், தங்கையும் புலிகளினால் பிடித்துச்செல்லப்பட்டுள்ளதாகவும் ஈ.பி.டி.பி அறிவித்துள்ளது.

கோட்டைக்கல்லாறில் நிலக்கண்ணிவெடி புதைக்கவந்த புலிகளை மக்கள் தடுத்தபோது, நாங்கள் சாகிறோம், நீங்கள் வாழவிரும்புகிறீர்களா? நீங்கள் இருந்தாலும் சரி, இறந்தாலும் சரி என்று கூறிய புலிகள் நிலக்கண்ணிவெடிகளைப் புதைத்துச் சென்றுள்ளனர்.

வட்டமேசை மகாநாடு என்றும், சர்வகட்சி மகாநாடு என்றும், பேச்சுவார்த்தையிலும், ஆலோசனைகளிலும் நீண்டகாலத்தைச் செலவிட்டுக்கொண்டிருப்பதனால் சுமுகமான தீர்வுகளைவிட பிளவுகளும், மோதல்களும் வளர்ந்துகொண்டு செல்வதற்கே வழி வகுப்பதாக இருக்கிறது. சில வேளைகளில் இறுதி முடிவு காணப்படும் போது முடிவைக் கேட்பதற்கு மக்களே இல்லாத நிலையும்கூட ஏற்படலாம் — இ.தொ.கா.வும், மக்ஞம் நிறைவேற்றிய தீர்மானத்திலிருந்து

மட்டக்ளப்பு மாவட்டத்தில் தோணியில் வந்துகொண்டிருந்த 2 பொதுமக்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

26.10.90 வீரகேசரி

நாட்டின் சொத்துக்கு அறவிலைவித்த

எல்.ரி.ரி.ஈ.யை மன்னிக்கமுடியாது — பாதுகாப்பமைச்சர்

ஜனாதிபதிமேல் நம்பிக்கை வைத்து எல்.ரி.ரி.ஈ. பேச்சு வார்த்தைக் குமுன்வரவேண்டும் என்று இ.தொ.க சார்பில் வேண்டிக் கொள்கிறேன் — செல்லச்சாமி

மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 5பேரின் சடலங்கள் வீதியில் கிடந்தன.

8 ஆயிரம் புலிகளில் 2 ஆயிரம் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்பட்டது. மிகுதி 6ஆயிரம் புலிகளையும் விரைவில் அழிக்கமுடியுமா? என்ற பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பாதுகாப்பமைச்சர், எல்லோரையும் நாமேயழிக்கத் தேவையில்லை. புலிகளில் பலர் தங்களைத் தாங்களே அழித்துகொள்கிறார்கள், சயனைட் அருந்துகிறார்கள் என்று பதிலளித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் சேபால ஆட்டிக்கல புலிகளுடன் லண்டனில் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார் —மக்கள் ஐக்கியமுன்னணித் தலைவர் தினேஷ்

27.10.90 வீரகேசரி

அம்பாறை மாவட்டத்தில் ஆயுதபாணிகளாகப் பிடிபட்ட 2 முஸ்லீம் ஊர்க்காவற்படையினரை முகாமுக்குக்கொண்டுசென்ற படையினர் அவர்களைத் தப்பியோடவிட்டுவிட்டு அந்தச் சாட்டில் 32 தமிழர்களைச் சுட்டுக்கொன்றனர்.

முஸ்லீம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையே விரோதத்தைத்தூண்டும் வகையிலான துண்டுப் பிரசுரங்களை இராணுவத்திலுள்ள சிலர் மட்டு நகரிலும், அம்பாறையிலும் விநியோகித்திருக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்கில் கடந்த 3 மாதங்களில் சுமார் 1,500பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

வடக்கு–கிழக்கு இணைப்பு சாத்தியமற்றதொன்று –சு.க.எம்.பி

தேர்தல் நடந்தால் ராஜீவ் காந்தி பிரதமராக வரலாம். அதற்கு முன்னதாக வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் –ஸ்டான்லி

மாற்று இயக்கங்களை அழிப்பதற்காக முன்னர் புலிகளுக்கு அரசாங்கம் ஆயுதங்களைக் கொடுத்தது. அதே போல இப்போது வேறு ஒரு இயக்கத்திற்கு அரசாங்கம் ஆயுதங்களைக் கொடுக்கிறது. இவர்கள் இன்று கொழும்பில் நவீனரக ஆயுதங்களுடன் இராணுவத்தால் வழங்கப்பட்ட வாகனங்களிலே திரிகின்றனர். அகதி முகாம்களில் உள்ளவர்கள் மத்தியிலிருந்து தமது இயக்கத்திற்கு இவர்கள் ஆட்திரட்டலும்செய்ய முயற்சிக்கிறார்கள். வெளிநாடுகளுக்குச்செல்ல கொழும்பு வந்திருக்கும் இளைஞர்களை தங்கள் இயக்கத்தில் சேருமாறும் இக் குழுவினர் நிர்ப்பந்தித்திருக்கின்றனர்.

28.10.90 வீரகேசரி

தற்போது ஜனஜ்யக தேசிய நீரோட்டத்தில் இணைந்துள்ள தமிழ்–முஸ்லீம் குழுக்களின் பங்களிப்புப் பற்றியும், ஆயுத–இராணுவ ரீதியில் இவைதம்மை எந்தளவுக்கு தயார்படுத்தி வருகின்றன என்பது பற்றியும் அரசு அவதானித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30.10.90 வீரகேசரி

வடக்கு, கிழக்கு யுத்தம் காரணமாக ஏற்பட்ட மேலதிக செலவினங்களை ஈடுசெய்யுமுகமாக அரசாங்கம் பொதுமக்களிடமிருந்து திறைசேரிஉண்டியல் மூலம் 2,500கோடி ரூபா திரட்டவிருக்கிறது.

வடக்கு, கிழக்கில் புதிதாக ஏற்பட்டுள்ள யுத்தம் காரணமாகவே அரசுக்குப் பெருமளவில் பணம் தேவைப்படுகிறது. யுத்தம் காரணமாக தினம் ஒன்றுக்கு 1கோடி 20இலட்சம்ரூபா செலவாகிறது.

மன்னார் பகுதியிலிருந்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லீம் மக்கள் புத்தளம் பகுதியில் 25 பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர். இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் மன்னார் – மாவட்டத்திலிருந்து முஸ்லீம்களை முழுமையாக வெளியேறுமாறு புலிகள் அறிவிப்பு விடுத்துள்ளனர்.

காணாமற்போன தங்கள் பிள்ளைகளை கணவன்மாரை விடுவித்துத் தரும்படி புகைப்படங்களைக்காட்டி, மட்டக்களப்பு அகதிமுகாமில் இருந்த பெண்கள் கதறியழுதபோது இவர்களைப் பார்வையிடச்சென்ற அரசியற் கட்சிகளில் இடம்பெற்ற சிங்களப் பெண்கள் கண்ணீர்விட்டு அழுதேவிட்டனர்.

புலிகள் திடீரென்று முஸ்லீம் மக்களின் நகைகள், உடைமைகள், பணம் ஆகியவற்றை அபகரித்துக்கொண்டு மன்னார் மாவட்டத்திலிருந்து அவர்களை வெளியேறுமாறு கேட்டிருக்கின்றனர். இங்கு தமிழ் அகதிகளை முஸ்லீம்கள் பாதுகாத்து, உணவளித்து, பராமரித்து வந்தனர். அந்தத் தமிழ் மக்கள் புலிகளின் கால்களில் விழுந்து கெஞ்சி, முஸ்லீம்களை வெளியேற்றவேண்டாமென்று உருக்கமாகக் கேட்டுக்கொண்டனர். மன்னாரில் இருந்து முஸ்லீம் அகதிகள் தற்போது சிறுவள்ளங்கள் மூலம் கல்பிட்டிக்கு வந்துகொண்டிருக்கின்றனர். அந்தப் படகுகளுக்கு உரிமையாளர்களான தமிழர்கள் கண்ணீருடன் வாடகைப் பணமும் வாங்காமல் அகதிகளைக்கொண்டுவந்து சேர்த்துள்ளனர்

---

உங்களுடன்...

கலம் 32வரை தூண்டில் போடுவதில் இணைந்துழைத்த சிவசோதி, யோசப் மோகன் இருவரும் தங்களின் தனிப்பட்ட காரணங்களுக்காக கடலோடிகளிலிருந்து விலகியுள்ளார்கள்.

தூண்டிலில் அக்கறை, ஆதரவு காட்டும் அனைவரினதும் ஆக்கத்துடனும், உதவியுடனும் நாம் தூண்டிலைத் தொடர்ந்து போடுகின்றோம்.

–கடலோடிகள்

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தவறான நியாயிப்புகள்

இந்தக் காலகட்டத்தில் தீவிர சிங்கள தேசியவாதத்தின் அச்சொட்டான வெளிப்பாடாய் ஜே.வி.பி/டி.ஜே.வி அமைப்பு பரந்த இயக்கமாக வளர்ச்சியடைந்துகொண்டிருந்தது. இதனை ஒற்றைத் தனியான வளர்ச்சியாகவோ, சுத்தசுயம்புவான வளர்ச்சியாகவோ நோக்க முடியாது.

ஜே.வி.பி.யின் அரசியல் தோற்றப்பாட்டிற்கு போலி நியாயர்த்தம் கற்பிக்கக்கூடிய முக்கிய பல துணைக் காரணிகள் இருக்கவே செய்கின்றன.

முதலாவதாக, இக் காலகட்டத்தில் பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் தொழிலாளர் வர்க்கம் உள்ளிட்ட சகல சமூகப் பிரிவினருமே சிங்கள - பௌத்த கருத்தாக்கத்திற்கு இரையாகிப் போயிருந்தனர். தமிழருக்கு எதிரான இனவாத வெறுப்பைக்கொண்ட சிங்கள - பௌத்த கருத்தாக்கத்தின் நீண்ட பாரம்பரியமானது தனது இனமேலாதிக்ககவாத வடிவங்களைப் புனரமைத்துக்கொள்ளும் வகையில் 1983ஐ அடுத்த காலப் பகுதியில் சுத்த இராணுவ மயமாக்கத்திற்கு இடங் கொடுத்தது. தத்துவார்த்த, அரசியல் வெறி இதனைப் பேணிவளர்த்தது. அரசயந்திரமும் பூர்சுவா கருத்தாக்கம் என்ற மெல்லிய படுதாவில் வைத்து இக் கருத்தாக்கத்திற்கு வர்ணப் பூச்சு இட்டிருந்தது.

பாரம்பரிய இடதுசாரிக்கட்சிகளும் பாராளுமன்ற வலைப் பின்னலுக்குள் சிக்கிக்கொண்டு பெரும்பான்மை சிங்கள இனத்தின் அரசியல் ஆதரவை நாடி, சிங்கள - பௌத்த கருத்தாக்கத்திற்கு எதிரான தமது கோட்பாட்டு ரீதியிலான போராட்டத்தைப் பூரணமாகக் கைவிட்டுவிட்டனர். உண்மையைச் சொல்லப்போனால், தமிழர்களின் ஜனநாயக உரிமைக்காக ஒரு காலத்தில் மகோன்னதமான போராட்டத்தில் எல்லாம் ஈடுபட்ட இடதுசாரிகள் தற்போது அதனைக் கைவிட்டுவிட்டதுமல்லாமல் சிங்கள - பௌத்த கருத்தாக்கத்திற்கு இசைவாக கோட்பாட்டு ரீதியில் சில விட்டுக்கொடல்களைச் செய்யவும் முன்வந்தார்கள்.

இரண்டாவதாக, இலங்கை சமூகத்தின் இடைத்தட்டு வர்க்கத்தின் அபிலாசைகளையும், புரட்சிகர சமூக மாற்றத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களுக்கிருந்த விருப்புணர்வையும் இடதுசாரிக் கட்சிகள் விளங்கிக்கொள்ளவில்லை.

இந்த நிலைமை ஜே.வி.பி./டி.ஜே.வி. கட்சி பெருவாரியான இளைஞர்களைத் தமது பக்கம் இலகுவாக வென்றெடுத்துக் கொள்ளப் பெரிதும் உதவியது. இது ஜே.வி.பி.க்கான முக்கிய சமூகத் தளத்தை அமைத்துக் கொடுத்தது. குறிக்கப்பட்ட விசேட அரசியல் கால இணைவில் கிராமிய இளைஞர்களின் தளமே இது. சிங்கள - பௌத்த கருத்தாக்கத்திற்கு சடுதியாக இரையாகிவிடக்கூடிய கிராமிய இளைஞர்களே அவர்கள்.

இதனைவிட புரட்சிகர சமூக மாற்றத்திற்கு ஜே.வி.பி. தந்த ஆயுதப் போராட்டம் பற்றிய விளக்கம் அரசியல் ரீதியில் முழுப் பிழையானது என்றால் இடதுசாரிகளிடமோ இதற்கு மாற்றாக வைக்கத்தக்க எந்தக் கோட்பாடுமே கைவசம் இருக்கவில்லை.

மூன்றாவதாக, பல்வேறு காரணங்களால் அரசு மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை வேகமாக இழந்து கொண்டிருந்தது. தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தால் மக்கள் மீதான சுமை வெகுவாய் அதிகரித்தது. வறுமையும், பட்டினியும், போசாக்கின்மையும், வேலையில்லாத் திண்டாட்டமும் முன்னென்றும் இல்லாதவாறு அதிகரிக்க ஆரம்பித்திருந்தன.

இதே நேரத்தில் சமூக நலவாய அரசு என்பதனைப் படிப்படியாகச் சிதைக்கும் கைங்கரியத்தை யு.என்.பி. பூரணமாக நடத்தி முடித்து விட்டது. சுகாதாரத்தையும், கல்வியையும் தனியார் மயப்படுத்த முனைந்ததன் மூலம் அது மக்கள் மீது பெரும் பளுவைச் சுமத்தியது. அடிப்படையில் இந்த அரசு ஜனநாயக விரோத அரசாக மாறியது. திட்டவட்டமாகத் தாங்கள் தோற்கப் போகும் ஒரு யுத்தத்தை அது நிர்த்தாட்சண்யமாகக் கொண்டு நடத்தியது.

நான்காவதாக, 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்தும். வடகிழக்கில் இந்திய இராணுவம் வந்திறங்கியதையடுத்தும் நிகழ்ந்த பரபரப்பூட்டும் நிகழ்ச்சிகள் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை முற்றுக்குக் கொண்டுவர இலங்கையை நிர்ப்பந்தித்தன.

www.tamilarangam.net




இந்தக் கட்டத்தில் நாம் மேலே குறிப்பிட்ட தீவிர தத்துவார்த்த, அரசியல் வெறி அணியின் தலைமைப் பாத்திரத்தை அரசு இழந்துவிட்டது.

சிங்கள மேலாதிக்க வாதிகளின் கண்ணோட்டத்தில், 'இந்திய ஆக்கிரமிப்பிற்கு' வழி சமைத்ததின் மூலமும், வட, கிழக்குப் பகுதிகளைத் தமிழர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டதன் மூலமும் அரசு தான் பிரதான குற்றவாளியாகக் காணப்பட்டது.

இந்திய எதிர்ப்பு உணர்ச்சி அலையிலிருந்து எழுந்த 'தேசபக்த வாதம்' எனும் புதிய வெளிப்பாடு ஜே.வி.பி.க்கு பலம் வாய்ந்த அரசியல் ஆயுதமாகியது. ஜே.வி.பி.யின் காலம் இப்போது கனிந்துவிட்டிருந்தது.

இந்தியத் துருப்புகளை இந்தியாவுக்குத் திருப்பியனுப்பத் தக்க பலம் மிகுந்த ஒரு அரசாங்கத்தை அமைக்க ஜே.வி.பி. இப்போது அறை கூவியது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ்

www.tamilarangam.net

அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபைகளைக் கலைக்குமாறும் இவர்கள் கோரிக்கை வைத்தனர்.

தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்தை வழங்கும் நோக்கில் இந்தச் சபைகள் அமைக்கப்பட்டாலும் உண்மையில் தமிழர்களுக்குப் பெரிதாக எதையும் இவை வழங்கிவிடவில்லை.

ஆனால் ஜே.வி.பி./ டி.ஜே.வி.யும், பிற சிங்கள மேலாதிக்கவாத சக்திகளும் தமிழர்கள் கோரும் தனிநாடு என்றும், தமிழ் ஈழத்தை அமைப்பதற்கான முதற்படியே இது என்றும் குற்றம் சுமத்தின. இதனால் சிங்கள இனத்திற்கு யு.என்.பி. பெருந் துரோகம் இழைத்ததாகக் குற்றம் கூறப்பட்டது. இந்தக் கைப்பொம்மை அரசைத் தூக்கி எறிய வேண்டும் என்பதே அப்போதைய பிரதானமான அரசியல் கோசமானது.

(தொடரும்)

●

---

யாழ் பல்கலைக்கழகத்திலும், வித்யாலங்கார பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராக பணியாற்றிய தயபால திராணகம தீவிர மாக்ஸியர் ஆவார். அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் 4 ஆண்டு காலம் சிறைத்தண்டனை அனுபவித்தஇவர் 1980களின் பிற்பகுதியில் ஸ்ரீலங்கா அரசால் தேடப்பட்டு — தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள நேர்ந்தது. ஜே.வி.பி. யின் சிங்கள இனவாதத்திற்—கெதிராகத் தீர்க்கமாகக் குரல்கொடுத்த இவர் ஜே.வி.பி. யின் கொலைப்பட்டியலில் முதலாவது நபராக இடம்பெற்றிருந்தார். தமிழர் அரசியலிலும், சிங்களவர் அரசியலிலும் நேரடி பரிச்சயம்கொண்ட இவரது கட்டுரை லண்டனிலிருந்து வெளியாகும் Inquilab என்ற தென்னாசிய தோழமைக் கழகத்தின் — காலாண்டு ஆங்கிலச் சஞ்சிகையிலிருந்து மொழிபெயர்த்து தரப்படுகிறது.

இக் கட்டுரை பற்றிய உங்கள் கேள்விகளுக்கு தயபால பதில் தருகிறார். இயலுமானளவு விரைவில் உங்கள் கேள்விகளை எமக்கு அனுப்பி வையுங்கள்.

— கடலோடிகள்

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கெனவே சீனுவிடம்வாங்கிய யுவான் 8, யுவான் 12 விமானங்கள் (Y8,Y12) போட்ட 300 கிலோ குண்டுகள் யாழ் நகரைச் சுற்றியுள்ள பிரதேசம் முழுவதையும் தரைமட்டமாக்கிவிட்டது. இனி தெல்லிப்பளை, காங்கேசன்துறை பகுதிகளுக்கு அந்த நிலைமை வரப் போகிறது. இந்த 300 கிலோ குண்டுகள் பங்கருக்குள் இருப்பவர்களது – காது, கண், மூக்கு வாய்களால் கூட இரத்தம் கொப்பளிக்கச்– செய்கிறது. அவ்வளவு ஆபத்தானது அது. சீனச் சூடை என்று உதயன் பேப்பரில் போட்டிருக்கிறார்கள்.

ஆக, மொத்தமாக ஒரு தாக்குதலைச் செய்ய இலங்கை அரசுக்குத் தேவைப்படும் அவகாசம் காரணமாகத்தான் அது ஓரளவு பின்வாங்க நினைத்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். தரை மார்க்கமாக நகராமல் ஆகாயமார்க்கமாக மட்டும் புலிகளை அழித்துவிட முடியாது என்பது அரசுக்குப் புரிகிறது. ஆக இதன் அடுத்த கட்டமாக ஒரு பெரிய யுத்தம் – தொடரப்போவது நிச்சயம் ஆனால்.... "

"ஆனல்...?" என்று நான் அவசரப்பட்டேன்.

"ஆனல் அப்படி ஒரு யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதில் அரசுக்குப் பல்வேறு கஸ்டங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று அதன் பலவீனமான பொருளாதாரம்..."

"அப்ப அவர்கள் பேச்சுவார்த்தைக்கு இறங்கி வருவாங்கள் எண்டு நினைக்கிறியா?"

"இப்ப அரசாங்கத்தின் நோக்கம் அதுதான். அது ஓரளவுக்குத் தெரியுது. புலியளும் மாநில சுயாட்சியை அடிப்படையாகக்கொண்டு பேசலாம் என அறிவித்திருக்கினம்தானே. ஆனல் திரும்பவும் பேச்சுவார்த்தையை தொடக்க பேச்சுவார்த்தை – தொடர்பான பிரச்சாரத்தைச் செய்யவேண்டிய அவசியம் இருக்கு அரசுக்கு. அதை இப்ப செய்யவும் தொடங்கியிருக்குது...

ஆனல்எப்படி அதை ஆரம்பிக்கிறது என்பது பற்றிய பிரச்சினைதான் இன்னமும் தீர்க்கப்படவில்லை.

முதலில் இராணுவ ரீதியான பலத்தைத் தயாரித்துக்– கொள்வது, பிறகு பேசுவது என்பது அரசின் எண்ணமாக இருந்தது. கோட்டை விவகாரத்தைத் தனது வெற்றியாக அது அதனல் தான் பிரச்சாரம் செய்கிறது. இது எடுபட்டால் பேச்சுவார்த்தைக்குப் போகலாம் அல்லது இன்னொரு வெற்றிவரை காத்திருக்கவேண்டும்....!"

"இந்தப் பேச்சுவார்த்–தையாலை என்னத்தைச் செய்யலாம்?"

"ஒண்டும் நடக்காது. உண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மையில் பேச்சுவார்த்தைக் காலம் தமது அரசியல் நிலைப்பாட்டை உலகுக்குத் தெளிவுபடுத்த புலிகளுக்குக் கிடைக்கிற ஒரு நல்ல அவகாசம். யூனுக்கு முந்திய 14 மாதங்களில் அதைப் புலிகள் கொஞ்சம்கூடப் பயன்படுத்தவில்லை. ஆனால் நான் முந்திச் சொன்ன மாதிரி பிரேமதாச அதை வடிவாய்ப் பயன்படுத்தினன். அதாலைதான் அவனாலை இந்த யுத்தத்தை இவ்வளவு காலமும் எந்த எதிர்ப்புமின்றி உலக சமுதாயத்தின் ஆதரவுடன் நடத்தினன். இனியும் அவன் அதைச்செய்யாமல் பாக்கவேணும். புலிகள் அதைச் செய்வார்களோ என்னவோ?"

"இதை எப்பிடி அவர்களுக்குச் சொல்லுறது?" என்றேன் நான்.

"எதை?"

"பேச்சுவார்த்தையை நடாத்துவது பற்றித்தான். அரசாங்கத்தை அம்பலப்படுத்தி அதன் 'நியாயங்களை' முறியடிப்பதற்கு ஏற்ற விதத்தில் எப்படிப் பிரச்சாரம் செய்யிறது என்பதை பற்றித்தான்..."

"ஆயிரம் மேடையளைவிட ஒரு வெடிகுண்டு மிகச் சிறந்த பிரச்சாரத்தைச் செய்யும் என கருதிறவையள் இவை. இவங்கள் எதையும் கேட்க மாட்டாங்கள். தங்களுக்குப் பிடிச்சதை ஆரும் சொன்னால் மட்டும் கேப்பாங்கள். அன்ரன் பாலசிங்கம் மாதிரி தங்கடை நடைமுறையை நியாயப்படுத்திற மாதிரி 'மாக்சிஸ்டுகள்' தான் இவங்களுக்குத்தேவை. அதுதான் பிரச்சினையளின்ரை அடிப்படையே"

"அப்ப என்னதான் செய்யிறது?"

"ஒண்டே ஒண்டு தான் செய்யலாம். எதைச் செய்யேலுமோ அதைச்செய்வம் எண்டதை விட்டிட்டு எதைச்செய்ய வேணுமோ அதைச்செய்ய வழிபாக்க வேணும்"

"எனக்கு விளங்கேலை!"

"முதலில் புலியளின்ரை சனநாயக மறுப்பு எல்லாக் கருத்துகளையும் அடக்கியிட்டுது. திறந்த விவாதமில்லாமல் சரியான கருத்தைக் காணமுடியாது. சரியான நடைமுறையை நடைமுறைபடுத்தவும் ஏலாது. இதாலை புலியள் தாங்கள் நினைச்சபாட்டிலை நடக்கிறாங்கள். எதற்கும் ஆமாப் போடுகிறவையைமட்டும் அங்கீகரிக்கிறாங்கள். எங்காவது ஒரு முட்டுச் சந்துக்கு போகும் வரை இவங்களாலை விசயத்தை விளங்கிக்கொள்ளேலாது...

www.tamilarangam.net

நான் நினைக்கிறன் திறந்த விவாதத்தை இலங்கைக்கு வெளியிலே நடத்த வேணும். சரி, பிழையளை கண்டு பிடிக்க வேணும். சரியானது இதுதானெண்ட கருத்துப் பலத்தை வெளியிலே உருவாக்க வேணும். அதுதான் ஒண்டில் புலியளுக்கும் நெருக்கடியைக் கொடுத்து ஏதாவது செய்தாலும் செய்யும். அல்லது ஒரு சரியான வழியைத் தொடர்ந்து ஒரு புதிய சக்தி எழுந்துவரும்.."

"அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது?"

"நாங்களும் அதில பங்கு கொள்ளவேணும். இதைப் பற்றி இன்னொரு நாளைக்கு ஆறுதலாய் கதைப்பம்"

நான் கடந்த சில வாரங்களாக எதைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தேனோ அதைப் பற்றியே நண்பரும் பேசியது எனக்குச் சந்தோசமாக இருந்தது.

என்ன விசயங்களைப் பற்றியெல்லாம் நாங்கள் விவாதிக்கவேண்டுமென நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் தயாராகிவிட்டீர்களா? சென்ற தடவை நான் எழுப்பிய கேள்விகளைப் பற்றிய உங்கள் பதில்களைப் பார்த்துவிட்டு அடுத்த கதைக்கலாம் என நினைக்கின்றேன்.

●




# அறிமுகம்




தொடர்புகளுக்கு

Georgicka Communications
P.O. Box 1031, Station "F"
Toronto, Ontario
M4Y 2T7 Canada



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(24ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூண்டில் பற்றிய விமர்சனம் குறிப்பிடுவதான மூன்று வகைகட்குள் குறுகிவிடவில்லை. விடுதலைப் போராட்டத்தின் செல்நெறி பற்றிய கருத்துகள் வெவ்வேறு அரசியற் சக்திகளாலும், புத்திஜீவிகளாலும் முன்வைக்கப்பட்டே வருகின்றன. அவை ஒரு வலிய அரசியல் இயக்கத்தை விருத்தி செய்யும் அளவுக்கு நமது உடனடியான சமகாலச்சூழல் துணையாக இல்லை என்பதால் வெறும் விமர்சனமாக மட்டுமே முற்போக்கான ஜனநாயக சிந்தனை முடங்கிவிட்டது என்ற குற்றச்சாட்டு நியாயமற்றது.

விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியையொட்டிச் சில வகையான மனத்தடைகளும் எழுந்துள்ளன. அவற்றை விழுத்தும் தேவையும் நம் முன் உள்ளது. இவை பற்றியும், போராட்டத்தின் முனைப்புப் பற்றியும் விரிவாக இவ்விடத்து எழுத இயலாமையால், இவை தூண்டில் பற்றிய விமர்சனம் எழுப்பியுள்ள விவாதத்தின் போக்கில் விரிவாக அலசப்படுமென எதிர்பார்க்கின்றேன்.

பெருவாரியான இயக்கங்களைப் பொறுத்தவரை தமிழ் ஈழமெனுஞ் சுதந்திரநாடே தமிழர் விடுதலையின் ஒரே இலக்கு என்ற நிலைப்பாடு இன்று மாறிவிட்டதென்று கருதுகிறேன். ஆயினுஞ் சுயநிர்ணயம் என்ற கருத்தைப் பொறுத்தவரை நிலைப்பாட்டில் மாற்றத்திற்கு இடமிருக்காது. இவ்வுரிமை பிரிந்துசெல்லும் உரிமையை உள்ளடக்கியதாக அமையவேண்டுமா? என்பது ஒரு முக்கிய கேள்வி. இது சித்தாந்த ரீதியான பிரச்சினையாக மட்டுமன்றிப் போராட்டத் தந்திரோபாயமெனும் முறையிலுங் கருதப்படவேண்டும்.

தமிழினம் ஒடுக்கப்பட்ட இனம், சிங்கள இனம் ஒடுக்கும் இனம் என்ற முறையிற் தேசிய இனப் பிரச்சினையைக் காட்டும் போக்கிற்கு முகங் கொடுப்பது எவ்வாறு?

ஒடுக்கப்படும் சிங்களமக்கள் பற்றித் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் நிலைப்பாடு எவ்வாறுதாயிருக்கவேண்டும்?

இலங்கையில் ஜனநாயக, அரசியல், மனித உரிமைகட்கான போராட்டத்துடன் தேசிய விடுதலைப் போராட்டத்தை இணைப்பது எவ்வாறு?

ஒடுக்குமுறை அரசிற்கெதிரான போராட்டத்தின் குறைந்தபட்ச இலக்கு என்னவாயிருக்கவேண்டும்?

இப் போராட்டத்தைப் பலவீனமாக்காத அதிக பட்ச ஒற்றுமை எந்த அடிப்படையில் அமையவேண்டும்?

முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய நிலைப்பாடு என்ன? அதை எவ்வாறு பேண இயலும்?

மலையகத் தமிழர் விடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலையும், உரிமையும் பற்றிய — போராட்டத்திற்கும் வடக்கு—கிழக்குத் தமிழர் விடுதலைப்போ—ராட்டத்தின் பங்களிப்பு என்ன?

இன்னமும் தொடரும்சாதி ஒடுக்கல் பற்றிய பார்வை என்ன?

இவ்வாறாக இன்று வரை விடுதலைப்போராட்டம் புறக்கணித்த அல்லது தவறாக இனங்கண்ட இன்னும் பல கேள்விகள் திரும்பவும் எழுகின்றன. இவற்றுக்குப் பதில் தேடும் போக்கில் விடுதலைப் போராட்டத்தின் புதிய முனைப்பும் தெளிவாகக் கூடும். ●

# தூண்டில்:— என்நோக்கில்...

தூண்டிலின் 5 அல்லது 6 கலங்களைப் பார்வையிட்டவன் என்ற முறையில் எனது கருத்துகளை முன்வைக்கவேண்டிய உணர்ச்சிக்கு ஆளான வேளையில் கலம் 34இல் வெளிவந்த 'தூண்டிலின் போக்கு' தெளிவற்ற குழப்பமான நிலைக்குத் தள்ளிவிட்டது என்பதே உண்மை.

தூண்டிலின் மீது வைக்கப்பட்ட விமர்சனங்கள் மூன்றுவகையாக்கப்பட்டிருந்தன. அவற்றையே எடுத்துக்கொள்வோம்.

1. எல்லா இயக்கங்களையும் நிராகரிக்கும் விமர்சனம்.

தூண்டில் தன்னை நடுநிலையாகக் காட்டி மக்கள் மத்தியில் புலிகளின் செல்வாக்கை அல்லது ஊடுருவலைத் தகர்த்தெறியும் நோக்குடனேயே மற்ற இயக்கங்களை மேலோட்டமாக விமர்சித்து, புலிகளின் நடவடிக்கைகளை நுணுக்கமாகவும் மிகையாகவும் விமர்சிக்கின்றது.

எல்லா இயக்கங்களும் — ஏதோ வழியில் தவறுகள் விட்டிருக்கின்றன. தலைமையைக் காக்க முயன்றிருக்கின்றன. தங்களுக்குள்ளேயே ஆதிக்க உணர்வுகளை வளர்த்திருக்கின்றன.

இதற்குப் புலிகளும் விதிவிலக்கல்ல. எனினும் ஏனைய இயக்கங்கள் செய்யாத, செய்யமுடியாத ஒன்றைப் புலிகள் செய்கிறார்கள்.

ஆனால் அதைப் 'பாசிச' பட்டம் சூட்டி மாயத் திரை போட்டு மூடப் பார்க்கிறது — தூண்டில்.

போராட்டம் என்றால் பாதிப்புகளும் என் சிலர் கூறுவதைப் போல் மண்டையோடுகளும், எலும்புக்கூடுகளும் மலியத்தான் செய்யும். இவை இல்லாமல் ஒரு போராட்டத்தை முன்

www.tamilarangam.net

னெடுக்க வேண்டுமென்றல் அதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியே போதும். புதிதாக ஒரு இயக்கமும் தேவையில்லை.

2. விமர்சனத் தகுதி தூண்டிலுக்கு இல்லை.

ஒரு பொது விடயத்தைப் பற்றி விமர்சிக்க எல்லோருக்குமே உரிமையுண்டு. அந்த விமர்சனம் ஒரு ஆரோக்கிய மாற்றத்திற்கு வழிசமைக்க வேண்டுமே தவிர அழிவுக்கு இட்டுச் செல்ல கூடாது.

ஆனல் தூண்டிலின் விமர்சனங்கள் புலிகளைப் பற்றி மக்களின் மனதில் தவறனதை விதைப்பதிலேயே முனைகின்றன.

## ராஜன் முருகவேல்

ஏனைய இயக்கங்களின் - பாரதூரமான செயல்களைவிட்டுவிட்டு ஏதோ அந்த இயக்கங்களையும் குறைகூறுகிறேம் அல்லது விமர்சிக்கிறேம் என்ற போர்வையில் சில சில்லறை விசயங்களை மக்கள் முன் வைப்பது போலித்தனமன்றி வேறென்ன?

ஆக்கபூர்வமான விசயங்களாக அமையாமல் சுயலாபத்திற்கும், போராட்ட நலிவுக்கும் வழிவகுக்கின் அந்த விமர்சகர்கள் தகுதியில்லாதவர்கள் என்று கூறுவதில் தவறேற்பட வாய்ப்புண்டா?

தூண்டில் இதைத் தானே செய்கிறது? ஏனைய இயக்கங்கள் எந்தவொரு நிலைப்பாடோ, கோட்பாடோ இன்றி இந்தியாவினதோ, இலங்கையினதோ முதலாளித்துவத்தின் கீழ் குளிர்காய்ந்துகொண்டு அரசோ, அந்நிய இராணுவமோ புலிகளுக்கு எதிராகத்தான் போராடுகிருர்கள், மக்கள் அழியவில்லை என்று மக்களைப் புலிகளாக மாற்றியமைக்கும் முதுகெலும்பில்லாமையைப் புலிகளை விமர்சிப்பது போன்று பாகுபாடின்றி விமர்சிக்க தூண்டில் பின்னிற்பது ஏன்?

இதிலிருந்தே தூண்டில் தன் இனங்காட்டுவது தெரிகிறது. உதாரணத்திற்கு 84, 85 களில் பரந்துபட்டளவில் புலிகளுக்கு நிகராக அல்லது அதற்கு மேலாக ஆதரவுடன் நிதி திரட்டிய புளொட் அதன் மூலம் சாதித்தது என்ன? அந்த நிதி எதற்குப் பயன்பட்டது? தங்களுக்குள்ளேயே ஒற்றுமையில்லாமல் குழுக்களாகப் பிரிந்து போராட்டத்தில் தம்மை இணைக்கச்சென்ற பல நூற்றுக்கணக்கான அப்பாவி இளைஞர்களைப் பழிவாங்கியதுதான் மிச்சம்.

சந்ததியார் பின்னல்சென்றர்கள் என்ற காரணத்தால் நள்ளிரவில் தமது உறுப்பினர்களையே நூற்றுக்கணக்கில் மண்ணில் புதைத்தவர்கள் கூட புலிகளை விமர்சிப்பது, அதைக் கண்டும்காணமல் தூண்டில் செயற்படுவது வேடிக்கையிலும் வேடிக்கை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புளொட்டுடன் ஒரு காலத்தில் கலந்தவன். இன்றுகூட அதன் முக்கிய தோழர்கள் சிலருடன் தனிப்பட்ட ரீதியில் தொடர்புள்ளவன் என்ற முறையிலேயே புளொட் இயக்கத்தைக் கோடிட்டுக் காட்டினேன்.

இப்படியாக ஒரு தலைப் பட்சமாக எழுதும் தூண்டில் தன் நிலையை மாற்றி, பாரபட்சமற்ற விமர்சனங்களை முன் வைக்கும்வரை விமர்சனத் தகுதி தூண்டிலுக்கு இல்லை என்பதில் என்ன ஐயப்பாடு?

3. புலி எதிர்ப்பு, அராஜகம்.. போன்றவற்றை மட்டுமே பார்ப்பது.

---

இதைத் தவறு என்றுசொல்வதற்கில்லை. தூண்டில் புலிகளை, அவர்களின் தவறுகளை விமர்சிப்பது தவறல்ல. ஆனால் அவற்றை மிகையாக விமர்சிப்பது- தான் தவறு. அப்படி புலிகளை மட்டும்தான் விமர்சிக்க வேண்டுமென்றால் நன்றாக விமர்சிக்க- லாம். ஆனால் தங்களை நேரடியாகவே இனங்காட்டி துணிந்து நிற்கலாமே? எதற்காக இந்த 'தூய்மைவாதம்' என்ற முகமூடி?

மேலும் தூண்டில் ஆசிரிய குழு விரும்பியோ, விரும்பாம- லோ தூய்மைவாத அணிக்குள் நுழைந்துள்ள ஒரு பகுதி என்ற வரிகளில் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களைத் திருப்தி படுத்த முயல்வதுதான் தெரிகிறது. ஏன் இந்த பொய்வேசம்? ஒரு பகுதி தூய்மைவாதத்திற்குள் நுழைந்தால் மற்றைய பகுதி என்ன செய்கிறது?

மேலே இயக்கங்கள் யாவற்றிலுமே தலைமைத்துவம் பேணப்படுகிறது என்று கூறினேன். தியாக மனப்பான்மையுடன் வரும் அடிமட்ட இளைஞர்கள் பாம்பையும், குரங்கையும் உண்ணப் பணிக்கப்படும்போது தலைமைகள் - சொகுசாக, ருசியாக உண்பதை மேற்கோள் காட்டலாம்.

அதைவிட சில இயக்கத் தலைமைகள் போராளிகளின் அன்றாடத் தேவைகளுக்கு உணவோ பணமோ கொடுக்காமல் எந்த வழியிலாவது பணம் தேடுங்கள் என்று பணிப்பதுதான் கொடுமை இதனாலேயே கொள்ளை, கொலை, வழிப்பறி அதிகரித்தன.

இன்று அத்தகைய இயக்கங்கள் பலம்குன்றிய வேளையில் சிதறிய சிறு குழுக்கள் போதை மருந்து, கடத்தல் போன்றவற்- றைச்செய்ய இத்தகைய தலைமைகளே காரணம்.

இந்தவகையில் ஏனையஇயக்கங்களில் இருந்து புலிகள் முற்றுமுழுதாகக் கட்டுப்பாடாக இல்லாவிட்டாலும், ஓரளவாகிலும் சிறப்பாகவே செயற்படுகிறார்கள்.

நான் புலிகள் ஆதரவாளன் அல்ல. நான் கடந்து வந்த பாதை வேறு. ஆனால் நான் நடந்துவந்த பாதையில் மனித ஒடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களும், எலும்புக்கூடுகளும் தலைமைக்காக, தலைமையாலேயே குவிக்கப்பட்டிருப்பதுதான் உண்மை.

ஈழப்போராட்டம் வளரவும், இன்றைய கால கட்டத்தில் ஆதரிக்கப்படவேண்டிய இயக்கமென்ற ரீதியிலும்தான் இங்கே ஆதரவு கொடுக்கவேண்டிய கட்டத்தில் உள்ளேன்.

புலிகளை நிராகரிக்கவேண்டின் ஈழவிடுதலைப் போராட்டத்தையே நிராகரிக்க வேண்டியதுதான். இன்றைய கட்டத்தில் புலிகளைத் தவிர வேறு எவருக்குமே போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தகுதியோ, பலமோ இல்லை. இன்றைய நிலையில் எது வேண்டுமோ அதை நியாயபூர்வமாக முன்னெடுங்கள் அப்போது எல்லோருமே தூண்டிலை ஆதரிப்பார்கள். ●

---

'தூண்டிலின் போக்கு' என்ற சக-ஓடிகளின் பார்வை பற்றியதும், அது தொடர்பாக தொடர்ந்துகொண்டிருக்கும் உங்கள் விமர்சனங்கள் பற்றியதுமான எமது கருத்துகளை இத் தொடரின் முடிவில் தருகிறோம்.

'நூறு பூக்கள்' பகுதியில் - தொடர்ந்தும் தூண்டில் பற்றியதும், அடுத்த கட்டம் பற்றியது-மான உங்கள் கருத்துகளை வரவேற்கிறோம்.

---



# வாசகர் கடிதங்கள்

ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டதுபோல் 'மூன்றுவது நிலை' கற்பனையில் தான் உருவாகலாம். வடமாராட்சி கடந்தகாலங்களில் பாதிக்கப்பட்டபோது போராட்டத்தை ஆதரித்த மக்கள் இன்று தாம் பாதிக்கப்பட்டபோது எதிர்க்கிறார்கள். இதுதான் மக்களின் இன்றைய நிலை. நாளைய நிலை?

கிழக்கு மாகாண மக்கள் அழுவதும், குடாநாட்டு மக்கள் கொழும்புக்குஇடம் பெயர்வதும் புலிகளுடனான மக்கள் பங்களிப்புக்குப் பதில் தருகிறதென்றால், தூண்டில் ஈழத்தில் வெளிவராமல் ஜேர்மெனியில் வெளிவருவது தூண்டிலின் எத்தகைய பங்களிப்பைக் காட்டுகின்றது?

தூண்டிலின் சில கலங்கள் கிழக்கு மக்களையும், வடக்கு மக்களையும் பிரிக்கும் பாணியில் கருத்துகளை கொண்டிருந்தன. தயவுசெய்து இனிமேலும் இதைத் தொடராதீர்கள்.

..... ராஜன் முருகவேல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"மூன்றாவது நிலை" என்படுவது தற்போதைய ஆயுத அராஜகச் சூழலில் தற்காலிகமாகச் சாத்தியப்படாதிருக்கலாம். ஆனால் "கற்பனையில் தான் உருவாகும்" என்று முடிவாகக் கொள்வதானது ஜனநாயக மறுப்பு என்பதுடன், வரலாற்றை படைப்பது யார் என்பது பற்றிய தெளிவின்மையை காட்டுவதாகவே 'கொள்ளமுடியும்.

வடமாராட்சி என்பது மக்களற்ற பாலைவனப் பிரதேசமல்ல. தாக்குதல்கள் நடந்தபோது அங்கும் மக்கள் இருந்தார்கள். பாதிக்கப்பட்டார்கள். அன்றும் பேலீ இன்றும் மக்களே பாதிக்கப்படுகிறார்கள்.

87இற்கு முந்திய காலப்பகுதியில் மக்கள் போராட்டத்தை—இயக்கங்களை—ஆதரித்ததற்கான பிரதான காரணிகளாக பொது எதிரியாக இலங்கை அரசு இருந்ததையும், ஈழத் தேசியவிடுதலைமுன்னணி என்ற பெயரில் சில இயக்கங்களுக்கிடையேயாவது குறைந்தபட்ச 'ஐக்கிய முன்னணி' ஏற்பட்டிருந்ததையும், இலங்கை இராணுவத்தை குடாநாட்டு முகாம்களுக்குள் முடக்குவதில் அனைத்து இயக்கங்களும் பங்குபற்றி களத்தில் 'ஒன்றாக' நின்றதையும், முக்கியமாக இயக்கங்கள் பற்றிய உண்மைகள் வெளிவராமலிருந்ததையும் குறிப்பிடலாம்.

ஆனால் பிந்திய காலங்களில் எதிரிகள் நண்பர்களாயும், நண்பர்கள் எதிரிகளாயும் பார்க்கப்பட்டு இயக்கங்கள் இலங்கை, இந்திய அரசுகளுடன் 'நட்புறவு' வளர்த்துக்கொண்டிருக்கும் நிலையிலும், தங்களுக்குள்ளும், சொந்த மக்களுக்கு எதிராகவுமே ஆயுதங்களைத் திருப்பி வைத்திருக்கும் நிலையிலும், தங்கள் சுயரூபத்தைக்காட்டிக்கொண்டிருக்கின்ற நிலையிலும்.. இந்த இயக்கங்களின் 'போராட்டத்தை' அல்லது இயக்கங்களை மக்கள் முழுமையாக ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதில் எந்த நியாயமும் இல்லை.

ஈழத்தில் வெளிவராமல் ஜேர்மெனியில் தூண்டில் வெளிவருவது எத்தகைய பங்களிப்பைக் காட்டுகிறது என்பதற்கான விடை இலங்கையிலிருந்து வரும் வாசகர் கடிதங்களில் தெளிவாக உள்ளது.

வடக்கு, கிழக்கு மக்களைப் பிரிப்பதான பாணியில் தூண்டிலில் எதுவும் பிரசுரிக்கப்படவில்லை.

— கடலோடிகள்

கடந்தகாலங்களில் வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் பற்றி எனக்குத் தவறான அபிப்பிராயங்களே இருந்தன. இவர்கள் சந்தர்ப்பவாதிகள் என்றும் வழி தவறிச் செல்பவர்கள் என்றுமே எண்ணியிருந்த என்னை தூண்டில் போன்ற ஏடுகள் சற்றுச் சிந்திக்கவைத்தன. உண்மையை வெளிப்படுத்தின.

ஒரு மனிதன் எங்கு நிற்கிறான் என்பது முக்கியம் அல்ல. அவனது உணர்வும், அதன் வாயிலான செயற்பாடுமே முக்கியம் என்பதைப் புரிந்துகொண்டேன்.

இன்று அரச பயங்கரவாதமும், தமிழ்ப் பயங்கரவாதமும் இணைந்து நடத்தும் மக்கள் விரோத நடவடிக்கைகளினால்புலம் பெயரும் நம்மவரின் விரக்திகளுக்கும், வேதனைகளுக்கும் ஆறுதல் அளித்து, அவர்களின் எதிர் கால வாழ்வினைச் செழுமைப்படுத்தும் இத்தகைய செயற்பாடுகள் பெரிதும் வரவேற்கத்தக்கதே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இவ்வகையில் எனது கருத்துப்போராட்டத்தை நடத்துவதற்கும், தெளிவினை ஏற்படுத்துவதற்கும் தூண்டிலையும் தெரிவுசெய்துள்ளேன்.

இலங்கை ....

தூண்டில் கடல் கடந்து வெளிவருகின்ற காரணத்தினாலோ என்னவோ ஈழத்தில் ஆட்களை உயிருடன் விழுங்கும் மனித சுருக்கள் வெளிச்சம் போட்டுக்காட்டக்கூடிய துணிச்சலுடன் செயற்படுகிறது.

இலங்கையில் எண்ணங்களை சுதந்திரத்துடன் வெளியிடும் தைரியம் டயர்களைக் கண்டு பயப்படாதவனுக்கு மட்டுமே தோன்றமுடியும்.

எவ்வித நிதி நெருக்கடிகள் நேரினும் தூண்டில் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்பதே எங்கள் அவா.

இலங்கை .....

# நிதர்சனம்

கோடையிடியிடித்து,
கொட்டிய மழைபோல்,
சேர்ந்துவந்த
தோழர்களை
தேதி நாளின்றிக் காணோம் !
தேடுகிறோம் !!
எங்கே தேடுவோம் ?
தேடுவோர்
நாம் ...

www.tamilarangam.net

சேர்த்துவைத்த
சொத்துகளையும்,
பூட்டி வைத்த
பெட்டிகளையும்,
படித்து முடிக்காத
நூல்களையும்,
வாழ்வின்
பரம்பரை வளர்க்க வந்த
வாரிசுகளையும்
பேசிப் பேசியே
அழித்துவிட்டவர்கள்
நாம் ...

இனியென்ன
மதியிருக்கு !
மீண்டுமொருமுறை
தோள் கொடுங்கள் !!
எழுதியதை
அழித்திடுவோம் !!!

நாம் ...
புத்திஜீவிகள்.
வீர தேவதைக்கு
வேள்வி நடத்துகிறோம்.
வாருங்கள் !
வாருங்கள் !!
ஒன்று சேருங்கள்.
தோழமை பெருகட்டும்.
கோசமிட்டவர்கள்
நாம் ...

மக்கள் மந்தைகள்.
மாற்றவேண்டும் !
மாற வேண்டும் !!
புதுப் புரட்சி
பூக்கவேண்டும் !!!
பூகம்பமாய்
வெடிக்க வேண்டும் !!!!

புதிய பூமி
பிறக்க வேண்டும் !!!!
கூறியவர்கள்
நாம் ...

கூட்டிலுள்ள பறவைகள்
சுதந்திரமாய் பறக்கவேண்டும் !

கிணற்றிலுள்ள தவளைகள்
சுதந்திரக் கடலில் நீந்தவேண்டும்

கிறுக்கிய பேனாக்கள்
சுதந்திரமாய் எழுதவேண்டும் !

வெதும்பிய இதயங்கள்
சுதந்திரமாய் பேசவேண்டும் !

தெருச் சுவர்களில்
எழுதியவர்கள்
நாம் ...

துணைக்கு வாருங்கள்.
துப்பாக்கி தூக்குவோம்.
தூண்களாய் வரும்
எதிரியைத்
தூசாக மாற்றுவோம்.
துணைக்கு வாருங்கள்.
எம்
தோளோடு சேருங்கள்.
கோரிக்கை விடுத்தவர்கள்
நாம்...

• ஜோனி •

www.tamilarangam.net

# அதிகார மாற்றத்தில் இருந்து

(கலம் 34இன் தொடர்ச்சி)

முதலில் குறிப்பிட்டதுபோன்று இந்திய முதலாளித்துவத்தின் நயவஞ்சகத்திற்குத் துணை போய், இந்திய அரசினதும், உளவுப் படைகளினதும் ஆலோசனைகளின் பேரில் அடாவடித்தனங்கள் புரிந்து இந்திய இராணுவ வெளியேற்றத்துடன் தாமும் வெளியேறி ஒரிசா மாநிலத்தில் தற்காலிக தங்குமிடத்தைக் கொண்டுள்ளார்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், டெலோ இயக்கத்தினர்.

இதில் வேதனைக்குரிய விடயம் என்னவெனில் உணர்ந்தோ உணராமலோ, கட்டாயத்தின் பேரிலோ இவர்களுக்கு உதவி புரிந்தவர்கள், தொண்டர் படையில் ஒரு பகுதியினர் புலிகளின் அராஜகங்களுக்குப் பயந்து எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் ஒரிசாவில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இந்திய இராணுவத்துடன் வெளியேறிய துரோகத் தலைமைகளையும், அவர்களுடைய எடுபிடிகளையும் அந்த நாட்டிலேயே சதிவேலைகள் செய்யவோ அன்றி இலங்கையிலேயே மீண்டும் சதிவேலைகளுக்குட்படுத்தவோ இந்திய முதலாளித்துவம் ஊட்டி வளர்க்கும் என்பதையும் கவனத்திலெடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, புலிகள் அரசியற் தீர்வை விரும்புகிறார்களில்லை, தமிழீழத்தையே குறியாகக் கொண்டிருக்கிறார்கள் என்ற கதையைக் கட்டி புலிகள் மீதான யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியது.

இதன் மூலம் எல்லா இயக்கமும் இந்திய முதலாளித்துவத்துடன் சோரம் போக, புலிகள் தானே இந்திய இராணுவத்திற்கெதிரான அதுவும் உலகிலேயே நான்காவது பெரிய இராணுவத்திற்கு எதிராகப் போராடினார்கள் என்ற கருத்தின் மூலம் கடந்தகால கறை படிந்த வரலாறுகளை மூடிமறைத்து புலிகள்தான் மக்களின் ஏக போக பிரதிநிதிக்குரிய தகைமையுடையவர்கள் என்ற மாயையை உருவாக்குவதுமாகும்.

அதாவது யுத்தத்தின்மூலம் புலிகளை இராணுவரீதியில் பலவீனப்படுத்தி, அரசியல் ரீதியாக பலப்படுத்துவதே இந்திய முதலாளித்துவத்தின் இரண்டாவது

www.tamilarangam.net

நோக்கமாகும். புலிகளை முற்று முழுதாக அழிப்பது இந்திய முதலாளித்துவத்தின் நோக்கமாக இருக்கவில்லை. மாறாகப் புலிகளைப் பலவீனப்படுத்தி இலங்கையரசுடன் பேச்சுவார்த்தைக் குட்படுத்தி ஒடுக்கு முறைக்கான 'சட்ட அங்கீகாரம்' வழங்குவதே நோக்கமாகும்.

ஒட்டுமொத்தத்தில் புலி இயக்கத்திலுள்ள போராளிகளின் இந்திய இராணுவத்திற்கெதிரான உறுதிமிக்க போராட்டமும், மக்கள் இழப்புகளும் புலிஇயக்க தலைமை அதிகாரத்தைக் குறி வைத்தே போராளிகளையும், மக்களையும் பலியாக்குகிறது என்ற உண்மையை வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. இது ஒன்றும் உலக அரசியல் வரலாற்றில் புதிதல்ல.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் காந்தியின் அகிம்சைப் போரை அகிம்சைப் போரில் ஈடுபட்டவர்களைக் கொன்றுகுவித்தன் மூலம் போராட்டத்தின் அதி சிறந்த நடவடிக்கையாகக் காட்டி, மக்கள் வன்முறையை நாடும்போது மக்களைத் திசை திருப்புவதற்காக காந்தியைச் சிறையிலடைத்து, பேரங்கள் நடத்தி, அதன்மூலம் உண்மையான புரட்சியாளர்களை தூக்கிலிட்டு, காந்தியையும், காங்கிரஸையும் புரட்சியின் பெரு வடிவங்களாகக் காட்டி தனது நவ காலனியச் சுரண்டலை நடாத்த அடித்தளமிட்டதுடன், 'மகாத்மா' காந்தி சுதந்திரம் பெற்றார் என்ற மாயையில் காங்கிரசின் தொடர்ச்சியான பிரதிநிதிகள் மக்களை ஏய்க்கவும், வதைக்கவும் வழிசமைத்துக் கொடுத்தது.

அன்று பிரித்தானிய ஏகாதிபத்தியம் காந்தியையும், காங்கிரசையும் வைத்து எவ்வாறு இந்திய மக்களின் கண்களில் மண்ணைத் தூவியதோ அதுபோன்று இந்திய, இலங்கை முதலாளித்துவங்கள் புலிகளை வைத்து தமிழ் பேசும் மக்களின் மண்ணைத்தூவுகின்றன.

எனவே நடைபெறும் நிகழ்வுகளைக்கொண்டு வெறுமனே முடிவுகளை எடுக்காமல், நடைபெறும் நிகழ்வுகளை –

## ந.சிவரூபன்

1. மாகாணசபையில் அங்கம் வகித்தவர்களின் அடியாட்களைக் கொண்டு 'முகமூடி தலையாட்டிகள்' மூலமும், நேரடி அடாவடித்தனங்களின் மூலமும் ஏன் மக்களைத் துன்புறுத்த வேண்டும்?
2. மக்கள் தேர்தல் கூட்டங்களுக்கு அழைத்தால் வரமுடியாத சூழ்நிலைகளை உருவாக்கி விருப்பத்திற்கு மாறாக ஏன் கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்லவேண்டும்?
3. கட்டாயத்தின்பேரில் தொண்டர்படைகளை உருவாக்கி அவர்களை ஏன் சித்திரவதை செய்யவேண்டும்?

www.tamilarangam.net

4. ஒட்டுமொத்தத்தில் மாகாண அரசு மக்களுக்கு எதிரானது (இது உண்மையாயினும்) என்பதை அதன் ஆரம்பத்திலேயே ஏன் வெளிப்படுத்த வேண்டும்?
5. அனைத்து இயக்கங்களின் சம்மதத்துடனும் ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருந்தும் இந்திய அரசு புலி இயக்கத்தை மட்டும் ஏன் ஒதுக்கிவைத்தது?
6. புலி இயக்கத் தலைமை இந்திய முதலாளித்துவத்தை உண்மையில் எதிர்க்கிறதா?

— பல வழிகளிலும் கேள்விக்குட்படுத்திப் பார்ப்பதன் மூலமே இந்திய இராணுவத்தின் வெளியேற்றம் இந்திய முதலாளித்துவத்திற்குக் கிடைத்த தோல்வியா? அல்லது உலக முதலாளித்துவங்களுக்கே கிடைத்த வெற்றியா? எனப் புரிந்துகொள்ளமுடியும்.

எனவே இலங்கை ஜனாதிபதியின் இந்திய இராணுவம் — வெளியேறவேண்டும் என்ற கோசங்களும், புலி இயக்கம் கக்கிய ராஜீவ்காந்தி எதிர்ப்பு வாதமும் (இந்திய முதலாளித்துவத்திற்கெதிரான எதிர்ப்புவாதம் அல்ல) அரசியல் நாற்காலிகளைத் தொடர்ந்து கைப்பற்றுவதற்கான ராஜதந்திரமேயாகும்.

அதாவது ஜே. ஆர். என்ற தனிநபர்தான் இந்திய இராணுவத்தை வரவழைத்தார். ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது பிரேமதாசவோ அல்ல என்ற கருத்தின் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவைப் பெற்றுக் கொள்வதிலும், உலகின் நான்காவது பெரிய இராணுவத்திற்கு எதிராகப் போராடினார்கள்; தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு புலிகள் வழி வகுத்தார்கள் என்ற கருத்தின் மூலம் தமது உண்மையான பிரச்சினைகளை மக்கள் கண்டறிய விடாமல் ஆட்சியதிகாரத்தைத் தொடர்ந்து தமதாக்கிக் கொள்வதுமே இவர்களது நோக்கமாகும்.

இவர்களைப் பொறுத்தவரையில் இராணுவ ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் ஓர் உடன்பாடுண்டு. அதாவது எங்கெங்கு அரசியல், பொருளாதார நெருக்கடிகளினால் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கான போராட்டம் கூர்மையடைய ஆரம்பிக்கின்றதோ நிலவும் முதலாளித்துவ அரசமைப்பு முறையை கவிழ்ப்பதற்கான சதிப் புரட்சிகள் மேற்கொள்ளப்படுகின்றதோ அங்கெல்லாம் 'தேசிய ஒருமைப்பாட்டை' பாதுகாக்க அந்நிய இராணுவத்தை இறக்குமதி செய்து தம்மை உறுதிப்படுத்திக் கொள்வதும், பின்னர் அந்நிய இராணுவத் தலையீட்டால் மக்களின் நேரடி எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரும்போது திரைமறைவில் அந்நிய இராணுவத்திற்கும், 'நட்பு' அரசுக்கும் நன்றி சொல்லிவிட்டு மக்கள் முன் 'அந்நிய இராணுவம் வெளியேறவேண்டும்; எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ளலாம்.

www.tamilarangam.net

என முழக்கமிட்டு 'நல்ல பிள்ளைக்கு நடிப்பதெல்லாம் ஏகாதிபத்திய, முதலாளித்துவத்தின் – பாதுகாவலர்களின் அரசியல் பம்மாத்துத்தான்.

அடுத்து அரசு–புலிகள் பேச்சுவார்த்தையினுல் பொருளாதார, அரசியல் ரீதியில் தமிழ்பேசும் மக்களுக்கு, குறிப்பாக உழைக்கும் மக்களுக்கு விமர்சனம் கிடைக்குமா?

'பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு' என்ற சொல்லை இலங்கை 'சுதந்திரம்' அடைந்ததிலிருந்து சிங்கள–தமிழ் பிரதிநிதிகளின் வாயால் கேட்டுகேட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு அலுத்துவிட்டது.

சேர். பொன். இராமநாதனின் ஐம்பதுக்கு ஐம்பதிலிருந்து டி. எஸ். சேனநாயக்க–ஜீ. ஜீ, டட்லி–செல்வா, பண்டா– செல்வா சிறிமா–சாஸ்திரி, ஜே. ஆர்– அமிர், வட்டமேசை மகாநாடு, சர்வகட்சி மகாநாடு, . . . . . எனத் தொடர்ந்தவை எமக்குத் தந்த பரிசுகள் என்ன? என்பதை இன்றைய பிரதிநிதிகள் 'கெட்ட கனவாக நினைத்து' மறந்தாலும் தமிழ் பேசும் மக்கள் மறக்கவில்லை.

ஒவ்வொரு பேச்சு வார்த்தையின் முடிவிலும் இனப் படுகொலைகளைப் புரிந்த சிங்கள ஆளும் கட்சிகளுள் ஐ. தே. க. கட்சியின் பங்கு அளப்பரியது. சில ஆண்டுகளுக்கொருமுறை நிகழ்ந்த இனக்கொலைகளை 83இற்குப்பிறகு ஐ. தே. க கட்சி அன்றுட நிகழ்ச்சியாக நடைமுறைக்குக் கொண்டுவந்தது.

83ஆம் ஆண்டுக் கலவரத்தில் அன்றைய பிரதமராகவிருந்த பிரேமதாச எவ்வாறு இனக் கலவரங்களைத் தூண்டி விட்டார். தனது குண்டர்படைகளைக்கொண்டு கொடூர முறையில் இவர் நடத்திய கொலைகளும், வெலிக்கடைச் சிறைப்படுகொலைகளும் மக்கள் மனதில் மறக்க முடியாத சம்பவங்களாகிவிட்டன.

ஆனுல் 'இன்றைய பிரதிநிதிகள்' அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, அடுத்த கட்டப் போராட்டத்தை நோக்கி நகரமுடியாத நிலையில், 'பிரேமதாச அன்றுசெய்த தவறுகளை உணருகிறுர்; தற்போது எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் துணிச்சலுடன் செயற்படுகிறுர்என திடீரென பிரேமதாச புத்தராக மறுஅவதாரம் எடுத்துவிட்டார்போல் கூறுகின்றனர். இவர்களின் அதிகார நோக்கம் அண்மையில் வஞ்சகத்தனமான முறையில் பிரேமதாச அரசினுல் ஜே வி. பி தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டதைக்கூட பார்க்க மறுத்துவிட்டது.

இவர்களது இரகசியப்பேச்சுவார்த்தைகளும், கடந்தகால அனுபவங்களும் மக்கள் மனதில் பல சந்தேகங்களை எழுப்பியதால் மக்களை குழப்ப வேண்டியது அவசியமாயிருந்தது.

தமது இலங்கையரசுடனுன

www.tamilarangam.net



(திரும்பிப் போகும் இந்திய இராணுவம்; இலங்கையிலிருந்து காஷ்மீருக்கு காவடியா?)

பேச்சுவார்த்தையை நியாயப் படுத்துவதற்காக சர்வதேச அரங்கில் முரண்பாடுகளை 'பேசி தீர்த்துக்' கொள்ளவேண்டும் என்ற கருத்து மேலோங்கி இருப்பதைக் குறிப்பிட்டு இக் கருத்துக்கு உறுதுணையாக ஏகாதிபத்தியங்களுடன் இணைந்து கோர்ப்பச்சேவ் கும்பல் நடாத்தும் ஏகாதிபத்திய விஸ்தரிப்பையும், ஏகாதிபத்தியங்களின் கைக் கூலிகளாகிவிட்ட தலைமையையும் துணைக்கழைக்கின்றனர். இங்குமறைமுகமாக வைக்கப்படும் கேள்வி என்னவெனில் 'பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகள்' என்ற முகமூடியைக் கழட்டி வைத்துவிட்டு உலகளாவிய ரதியில் அதிகாரத்திற்கான போட்டி நடக்கும் போது நாமும் கலந்து கொண்டால் என்ன என்பதேயாகும்.

கிட்டத்தட்ட 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களைப் பறிகொடுத்து, ஆயிரக்கணக்கான உணர்வுமிக்க போராளிகளைப் பறிகொடுத்து, எத்தனையோ இளம் பிஞ்சுகளை அனாதைகளாக்கி ஆயிரக்கணக்கானவர்களை அங்கவீனர்களாக்கி, சொத்துகளை இழந்து நாம் கண்ட உண்மை பிரேமதாச கண்ணியமும், நேர்மையும் நிறைந்தவர் என்பதேயாகும்.

எமது போராட்டம் வாழ்நிலை பாதிக்கப்பட்டதன் வி

www.tamilarangam.net

ளவாக உதயமானது என்பதை, கடந்தகால அகிம்சாமூர்த்திகள் தமிழும், சைவமும் ஆட்சி பீடத்தில் அமரவேண்டும் என கோசங்களை வைத்து மக்களை திசை திருப்பிய கைங்கரியத்தை இன்றைய பிரதிநிதிகள் செய்கின்றனர். இதனடிப்படையில் எழுந்த வெளிப்பாடே வாகனங்களில் இருந்து 'ஸ்ரீ' என்ற எழுத்து அகற்றப்பட்டமையாகும். இவ்வடிப்படையிலேயே மீண்டும் பிரச்சினையைத் திசை திருப்புகிறார்கள்.

இவையன்றி பொருளாதார ரீதியிலோ, அரசியல் ரீதியிலோ தமிழ் பேசும் மக்களுக்கு குறிப்பாக உழைக்கும் மக்களுக்கு பொருளாதார மேம்பாடோ, சுதந்திரமோ கிடைக்கப் போவதில்லை என்பதை புலிகளின் மக்கள் முன்னணியின் யாப்பே ஒப்புக்கொள்கின்றது. அதாவது குறிப்பிட்ட உழைக்கும் மக்கள் இணைந்து தொழிற் சங்கம் ஆரம்பிக்கும் சாதாரண அடிப்படை உரிமைகூட மறுக்கப்பட்டு, தொழிற்சங்கம் அமைப்பதற்கான அதிகாரம் மாவட்ட மக்கள் சபை நிர்வாகக் குழுவிற்கும், மாவட்டசபையின் அரசியல் அமைப்பாளருக்குமே வழங்கப்பட்டிருக்கிறது.

இதையும் குறிப்பிட்டு தமிழ், முஸ்லீம் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள், சுரண்டல் முறைகளுக்கு எதிராகப் போராடப் போவதாகவும் அந்த அரசியல் யாப்பு கூறுகிறது.

ஏகாதிபத்தியத்தை கம்பளம் விரித்து வரவேற்கும் இலங்கை தரகு முதலாளித்துவ அரசமைப்பு முறைக்குள் ஆட்சியதிகாரத்தை அமைத்து இவற்றை நடைமுறைப்படுத்த முடியாதென்பதும், புலி இயக்கத் தலைமை சுரண்டப்படும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதல்ல என்பதும், இன்றைய எந்த இயக்கத் தலைமைகளும் குறைந்த பட்ச முதலாளித்துவ ஜனநாயக உரிமைகளையே வழங்கமாட்டா என்பதும் நன்கு தெளிவான விடயம்.

இலங்கையின் வெளிநாட்டு கடன்களும், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றமும், இன்ன பிற பொருளாதாரக் காரணிகளும் தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி சிங்கள மக்களுக்கும் விமோசனத்தைக் கொடுக்கப் போவதில்லை.

இலங்கையின் இன்றைய பொருளாதார நிலைமையை கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது இதன் உண்மை தெளிவாகும்.

ஏகாதிபத்தியங்கள் ஒரு போதும் மூன்றாம் உலக நாடுகளைத் தலைநிமிர விடப் போவதில்லை. தொடர்ந்து கசக்கிப் பிழிந்துகொண்டேயிருக்கும். இந் நிலை இருக்கும்வரை, பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்படும் வரை இலங்கையரசினால் இலங்கை மக்களின் அடிப்படைத் தேவைகளை (இன முரண்பாட்டினால் தமிழ் பேசும் மக்களைவிட சிங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள மக்களுக்கு அற்ப சலுகைகள் கொடுக்கப்படலாம்!) பூர்த்தி செய்யவோ அல்லது குறைந்தபட்ச முதலாளித்துவ ஜனநாயகத்தைக் கொண்டுவரவோ முடியாது.

எனவே பிரேமதாசவின் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான 'துணிச்சல்மிக்க நடவடிக்கையின்' பின்னணிதான் என்ன?

இலங்கையரசு சிறுபான்மையினருக்கு எதிரான அரசுஎன சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் என்று தங்களைத் தாங்களே கூறிக்கொண்டவர்களின் பிரச்சாரங்களினாலும், இனப்படு கொலைகளினாலும் உலக அரங்கில் தனிமைபட்டுப் போயிருந்தது. எனவே 'சிறுபான்மையினரின் பிரதிநிதிகளாலேயே' இலங்கையரசு கண்ணியமானது, நேர்மையானது என்றும் இலங்கைப் படைகள் சகோதரர்களே என்றும் கூறவைத்து தன்னைக் கண்ணியவானாக நேர்மையாளனாகக் காட்டிக் – கொண்டது.இப் பணி நிறைவெய்தியதும் இனவாதத்தைத் தொடர்ந்தும் பாதுகாப்பதற்கான வேலையில் இறங்கியது. அதாவது பதவி சுகத்தை எண்ணி கற்பனையில் மிதந்த புலித் தலைமையுடன் பேசமுடியாது, அவர்கள் கிறிமினல்கள் எனக்கூறி இலங்கைப்படைகளை மோதவிட்டு இனவாதத்தைத் தொடர்ந்தும் பாதுகாக்கின்றது.

புலித் தலைமையின் பதவியை மட்டும் குறிக்கோளாகக்–கொண்ட அரசியலற்ற அணுகுமுறைகளினால்–

1. சிங்கள மக்கள் மத்தியிலிருந்தும் தனிமைப்பட்டுக்கொண்டிருந்த இலங்கை ஜனாதிபதி தேசிய வீரனாக தன்னை நிலைநிறுத்திக்கொண்டது.

2. வரலாறு காணாத அளவில் – தேசியபாதுகாப்பு நிதி திரட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது.

3. இலங்கைப்படைகள் தாய் நாட்டுக்காகப் போராடும் சிங்கங்களாக வாழ்த்தப்படுகிறார்கள்.

3. ஆளும் கட்சியின் புலிகளுக்கெதிரான தாக்குதலை ஆதரித்துவந்த அனைத்து எதிர்க்கட்சிகளும் புலிகளின் பின்வாங்கல் இலங்கையரசைப் பலப்படுத்திவிடும் என அஞ்சி யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தவேண்டும் எனக் கோசமெழுப்பி தங்களைப் பலப்படுத்த முனைகின்றன.

4. கிழக்கு மாகாணத்தில் ஏராளமான முஸ்லீம்களைப் படுகொலைகள் செய்ததன் மூலம்(இக் கொலைகளை எந்த இயக்கம் செய்தது என்பதிலும் பார்க்க, எந்த இயக்கமும் இக்கொலைகளைச் செய்ய எந்த சக்திகளுடனும் உடன்பட்டிருக்கும் என்பதும், இக்கொலைகளில் அரசபடைகளுக்கும் பங்குண்டு என்பதும் கவனத்தில்கொள்ளப்பட வேண்டும்.) வடக்கு – கிழக்கு

www.tamilarangam.net

பிரிவிற்கான சந்தர்ப்பத்திற்கு மேலும் உரமூட்டியது.


5. இலங்கையரசு இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இல்லையேல் உதவி நிறுத்தப்படும் எனக்கூறிவந்த உலக நாடுகள் இப் பேச்சுவார்த்தைகளையும், முஸ்லீம்கள் படுகொலையையும் காரணம்காட்டி மீண்டும் உதவிகளை அதிகரித்துள்ளனர்.

6. புலிகள் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களிடமிருந்து தனிமைபட்டுப் போயிருக்கின்றனர்.

7. என்றுமில்லாதவாறு இராணுவம் முன்னேறிக்கொண்டிருக்கிறது. மீண்டும் குடாநாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பதுங்கியிருந்து தாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பித்ததிலிருந்து இலங்கைப்படைகளின் தற்போதைய வெற்றிகளைக் கணக்கிடலாம்.

எது எப்படியிருப்பினும், இந்த யுத்தத்தால் பாதிக்கப்படுபவர்கள் ஏன் சாகிறோம் எனத் தெரியாமல் செத்துக்கொண்டிருக்கும் அப்பாவிப் பொது மக்களும், போராளிகளுமேயாவர். இந்நிலையில் மக்கள் முன்செல்ல வக்கற்ற ஏனைய தலைமைகள் தாம் இந்திய அரசின் குகையில் குளிர்காயும்போது இலங்கை இராணுவமும், புலிகளும் சேர்ந்து தமது தோழர்களைக்கொன்றதையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டு இலங்கையரசின் பொது மக்களுக்கெதிரானதும், புலிகளுக்கெதிரானதுமான போருக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டிருக்கின்றன.

இவையெல்லாம் ஒன்றை மட்டும் எமக்கு உணர்த்துகின்றது. எமது விதியை எமது கரங்களே நிர்ணயிக்கும்வரை விடுதலை இல்லையென்பதேயாகும்.



... இந்திய முதலாளித்துவத்தின் நோக்கம் தொடர்ந்தும் இனவாதத்தைத் தூண்டிவிட்டு அங்கு ஒரு இன ஒருமைப்பாட்டையும், வர்க்க எழுச்சியையும் ஏற்படவிடாமல் பாதுகாக்கக் கூடிய தலைமையிடம் இலங்கை அரசின் மூலம் அற்ப சலுகைகளைப் பெற்றுக்கொடுத்து, இலங்கை மக்களிடம் பிரசவிக்க இருக்கும் இன ஒற்றுமையை, வர்க்க எழுச்சியை ஒடுக்குவதுமேயாகும்... என்று கட்டுரையாளர் குறிப்பிடுகிறார். (கலம்: 34 ; பக்கம்: 20 )

(தொடர்ச்சி 56ஆம் பக்கம்)

# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.


**நவம்பர் 1990** **இலம்:35**

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ........... தென்னாசிய நிறுவனம்



முகவரி .............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633


## சந்தா விபரங்கள்

மேற்கு ஜேர்மெனி: 6 மாதங்கள் – 20,– டி.எம்
1 வருடம் – 38,– டி.எம்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய வங்கி கணக்கு இல. 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

ஐரோப்பிய நாடுகள்: 6 மாதங்கள் – 25,– டி.எம்
1 வருடம் – 48,– டி.எம்

ஏனைய நாடுகள்: 1 வருடம் – 45,– யு.எஸ்.டொலர்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய தபால் கணக்கு இல.30807468
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தைக் கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

நன்றி.

www.tamilarangam.net

இலங்கை அரசு ஸ்தானத்தில் மாறி மாறி பதவிக்குவந்த பேரினவாதக் கட்சிகள் அனைத்துமே இனவாதத்தை ஸ்தாபனபடுத்தி தம்மைப் பலப் படுத்த முயன்றுகொண்டேயிருக்கின்றன.

பௌத்தமத வெறியர்கள் உயர்தர வர்கத்தினர், இனவெறியர்கள் ஆகியோரே அன்றிலிருந்து இன்றுவரை இலங்கை அரசில் (அரசியலில்) ஆதிக்க சக்திகளாக இருப்பதால், இவர்களைச் 'சமாளித்து' அல்லது இவர்களுடன் ஒத்துப்போவதன் மூலமே இலங்கை அரசு தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். முடிந்திருக்கிறது. (ஏகாதிபத்தியங்கள் அரசுக்கு உதவியளிப்பதை ஒரு புறம் வைத்துக்கொள்வோம்.)

இதனாலேயே - தனக்கு தேவையாயிருந்தும் கூட -பேரினவாதிகளின் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க முடியாமல்தான் இலங்கையரசு இந்திய இராணுவத்தை வெளியேற்றும் கோரிக்கையை முன்வைத்தது. ( இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்தமையாலேயே தம்மால் தென்னிலங்கையில் அரசுக்கெதிரான சக்திகளை அழித்ததாக ஆளும்கட்சியினர் கூறிக்கொண்டது நினைவுகூரத்தக்கது)

ஆனால் இலங்கை அரசைப் போல, இலங்கையில் இனவாதத்தைத் தொடர்ச்சியாகப் பேண வேண்டிய தேவை இந்திய அரசுக்கு இல்லை. அத்துடன் இனவாத கலவரங்கள் ஏற்படுவது-

1. இவற்றை அடக்க உதவுதல் என்ற சாக்குடன் வேறு அந்நிய சக்திகள் இலங்கைக்கு வர இடமளிக்கும்.

2. தனிநாட்டு கோரிக்கை வலுவடைந்து இலங்கை இரண்டாகுவதற்குரிய சாத்தியங்கள் அதிகரித்தல்

- போன்ற காரணிகள் இந்தியாவின் கேந்திர நலன்களுக்கும், 'தனிநாடு' கோசம் உள்நாட்டு அரசியலுக்கும் பாதக-மானவை என்பதில் இலங்கையின் இனக்கலவரங்களை 'அடக்குவதில்' இந்திய அரசு எப்போதும் கவனமாகவே இருந்துவருகிறது.

1986ஆம் ஆண்டு 'ரோ' வின் தூண்டுதலின் பேரில் புலிகள் அநுராதபுரத்தில் சிங்களமக்களை படுகொலை செய்தமை கூட இலங்கை அரசைப் பணிய வைக்கும் இந்திய அரசின் தந்திரங்களில் ஒன்றாகக் கையாளப்பட்டதேயொழிய இனக் கலவரங்களைத் தூண்டும் நோக்கில் நடத்தப்படவில்லை.

எனவே இனவாதத்தை கையாள்வதில் இலங்கை அரசும் இந்திய அரசும் முரண்பாடுகொண்டிருக்கின்றன என்றே நாம் கருதுகிறோம்.

(மிகுதி அடுத்த கலத்தில்)